Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 252

புதன்கிழமை
06 ஒகஸ்ட் 2025

ஆடி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 20
விலை – ரூபா 50

## கட்டைக்காடு பகுதியில் 102 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 6
கட்டைக்காடு ஆழியவளை பகுதியில் நேற்று மாலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது

19

செம்மணி சித்துப்பாத்தி மயானத்தின்

# ஸ்கான் முடிவுகள் என்ன? 3 வாரங்களில் அறிக்கை!

சட்டத்தரணி ரணித்தா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 6**

**அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்கான் பரிசோதனைகள் தொடர்பான இறுதி அறிக்கை, எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.**

19

## புதன்பொய்கை

செம்மணிப் புதைகுழி

### அகழ்வுப் பணிகளில் அரசியற் தலையீடு!

கஜேந்திரகுமார் எம்.பி. பரபரப்புக் குற்றச்சாட்டு

விரிவு பக்கம்:- 19

### புதைகுழி விடயத்தில் அரசியல் வேண்டாம்!

கஜேந்திரகுமார் எம்.பி.க்கு அமைச்சர் பிமல் பதில்

விரிவு பக்கம்:- 19

## செம்மணி சான்றுப்பொருள்களை 200 பேர் வரையானோர் பார்வை

அடையாளம் காட்டப்படவில்லை

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 6
செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களை சுமார் 200 பேர் வரையானவர்கள் பார்வையிட்டுள்ளனர். எனினும், எவரும் எதையும் அடையாளம் காட்டவில்லை.

19

## மேலும் 6 என்புத்தொகுதிகள் செம்மணியில் நேற்றும் அடையாளம்



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 6
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின் போது, மேலும் ஆறு என்புத்தொகுதிகள்

19

எம்.பி.க்களுக்கான **காப்பீடும் மட்டுப்பாடு**

விரிவு பக்கம்:- 05

### முச்சந்தி முரளி

'அந்த ரிப்போர்ட் வந்தபிறகு இன்னும் எத்தனை புதைகுழியள் வெளியில வரப்போகுதோ?'

செம்மணிப் புதைகுழியில்

## சர்வதேசத் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 6
செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

19

## தென்னக்கோனை நீக்கும் தீர்மானம் நிறைவேற்றம்!

எவரும் எதிர்க்கவில்லை

கொழும்பு, ஓக. 6
தேசபந்து தென்னக்கோனை, பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தில்

19

மன்னாரில்

## காற்றாலை மின்திட்டம்; எதிராகக் கடையடைப்பு!

மன்னார், ஓக. 6
மன்னாரில் காற்றாலைகளை அமைக்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்தச் செயற்பாட்

19

மன்னார் காற்றாலை தொடர்பில்

## நாடாளுமன்ற வளாகத்தில் நாளை கலந்துரையாடல்!

ஜனாதிபதியும் பங்கேற்க வாய்ப்பு

விரிவு பக்கம்:- 19

உலகளாவிய சுகாதாரத்துக்கு அதிகாரமளித்தல்

நீரிழிவு நோயை வென்று ஆரோக்கியமாக வாழ்ந்திட



GINSOMIN®

அத்தியாவசியமான 19 விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் அடங்கிய Korean Panax Ginseng

ஜின்சோமினில் உள்ள உண்மையான Korean Panax Ginseng இன்சுலின் உணர்திறனை மேம்படுத்துவதற்கும் உடலில் இன்சுலின் எதிர்ப்பை குறைப்பதற்கும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

MEGA We care
www.megawecare.lk
0114 375 364 | 077 34 100 71
நாடளாவிய ரீதியிலுள்ள முன்னணி சுப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
இறக்குமதி செய்து விநியோகிப்போர் : A Baur & Company (Pvt.) Limited

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 | திகதி 05.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4154 | சீட்டிழுப்பு இலக்கம் 1221 | சீட்டிழுப்பு இலக்கம் 0180 | சீட்டிழுப்பு இலக்கம் 2260 | சீட்டிழுப்பு இலக்கம் 5912 | சீட்டிழுப்பு இலக்கம் 1942 | சீட்டிழுப்பு இலக்கம் 0487 | சீட்டிழுப்பு இலக்கம் 0028 |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கினம் மகரம் | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கினம் கன்னி |
| | | | சுப்பர் இலக்கம் 03 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 19 33 39 67 | வெற்றி இலக்கங்கள் 13 24 51 55 | வெற்றி இலக்கங்கள் 3 2 8 4 | வெற்றி இலக்கங்கள் 22 28 32 74 | வெற்றி இலக்கங்கள் 5 3 0 9 2 8 | வெற்றி இலக்கங்கள் 02 34 41 61 | வெற்றி இலக்கங்கள் 0 9 2 8 | வெற்றி இலக்கங்கள் 02 35 52 53 |
| விசேட எழுத்து F | | | | | விசேட எழுத்து N | | |

# சோமரத்னவின் கடிதம் தமிழருக்குத் துரும்புச்சீட்டு

## அருட்தந்தை மா.சக்திவேல் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக.6**

**சோமரத்ன ராஜபக்சவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை தமிழ் அரசியற் தலைமைகள் சர்வதேச விசாரணைக்கான துரும்புச்சீட்டாகப் பயன்படுத்த வேண்டும் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியற் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செம்மணி மனிதப் புதைகுழியில் எடுக்கப்படும் மனித என்புச்சங்கள், படுகொலை செய்யப்பட்டோரின் அவலக்குரல் மக்களின் இதயங்களைத் தட்டிக் கொண்டிருக்கின்றது.

கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் சோமரத்ன, 400க்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டமைக்குச் சாட்சியாக இன்றும் உள்ளார்.

தனக்கு நீதி கிடைக்கவில்லை, தண்டிக்கப்படவேண்டிய உயர் அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லை, இலங்கையின் நீதி விசாரணையில் நம்பிக்கை இல்லை, சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளேன் என்று சோமரத்னராஜபக்சதனதுமனைவி ஊடாகக்கூறியுள்ளமை, சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கும் தமிழர்களின் குரலுக்கு வலுச் சேர்ப்பதாகவே உள்ளது. சோமரத்ன ராஜபக்சவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை தமிழ் அரசியற்தலைமைகள் சர்வதேச விசாரணைக்கான துரும்புச்சீட்டாகப் பயன்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | ஆங்கில எழுத்து W | வெற்றி வாரம் 0620 |
| வெற்றி இலக்கம் 3 0 8 4 6 6 | | | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2886 | ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 01 08 43 76 | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கம் 24 32 49 54 | வெற்றி வாரம் 5047 | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| வெற்றி வாரம் 0741 | வெற்றி இலக்கம் 03 27 30 | | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| மேஷம் | வெற்றி இலக்கம் 09 17 27 43 | சீட்டிழுப்பு வாரம் 4598 | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து M | சுப்பர் இலக்கம் 31 | வெற்றி இலக்கம் 19 41 54 63 | வெற்றி வாரம் 2062 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி 05.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 20 21 46 52 | வெற்றி வாரம் 2712 | |

## இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரான மனு தள்ளுபடி

கொழும்பு, ஓக.6

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை உரிமைகள் மனுக்கள் உயர்நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டன.

உயர்நீதிமன்ற நீதியரசர் அச்சலா வெங்கப்புலி மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வு, விண்ணப்பங்களைத் தொடர எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறி இரண்டு மனுக்களையும் தள்ளுபடி செய்ய முடிவு செய்தது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, வெற்றிகரமான டிஜிற்றல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் கிழக்கு மாகாணத்துக்கான பல்துறை மானிய உதவி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் பரிமாறப்பட்டன. மனுதாரர்கள் சார்பாக ஜனாதிபதி வழக்கறிஞர் மனோகர டி சில்வா மற்றும் மூத்த வழக்கறிஞர் கனிஷ்கா விதாரண ஆகியோர் முன்னிலையானார்கள். சட்டமா அதிபர் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் முன்னிலையானார். (எ-இ)

வரியைக் குறைப்பதற்கான

# அமெ. நிபந்தனைகளை பகிரங்கப்படுத்துங்கள்

## விமல் வீரவன்ஸ கோரிக்கை

கொழும்பு, ஓக.6

தீர்வை வரியைக் குறைப்பதற்காக அமெரிக்காவின் எவ்வாறான நிபந்தனைகள் ஏற்கப்பட்டன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு ஆரம்பத்தில் 44 சதவீத வரி விதிக்கப்பட்டது. பின்னர் அது 30 வீதமாகக் குறைக்கப்பட்டது. இறுதியில் 20 சதவீதமாக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கு வரவேண்டும் என அமெரிக்க தரப்பில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள நிபந்தனைகள் எவை? சோபா ஒப்பந்தத்தக்குரிய இணக்கம் ஏற்பட்டுள்ளதா? சோபா ஒப்பந்தம் ஏற்கப்பட்டால் அமெரிக்கப் படைகள் நாட்டுக்குள் வரமுடியும். ஆகவே, பாதுகாப்பு நிபந்தனைகள் ஏற்கப்பட்டனவா? இதுபற்றி எமக்குத் தெரியாது. ஏற்கப்பட்டிருந்தால் அவை எவை என்பதை வெளிப்படுத்தவேண்டும். இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஏழு ஒப்பந்தங்கள்கூட இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. அமெரிக்காவுடன் ஏற்கப்பட்ட நிபந்தனைகளை இந்த அரசாங்கம் வெளிப்படுத்தும் என்பதை நம்பமுடியாது- என்றார். (எ-44)

## 18 வயதுக்குட்பட்டோருக்கு அரசால் விசேட சலுகை

கொழும்பு, ஓக.6

மத்திய கலாசார நிதியத்தால் நிர்வகிக்கப்படும் சிகிரியா, யாபஹுவா மற்றும் தம்புள்ளை போன்ற கலாசாரப் பாரம்பரிய இடங்களைப் பார்வையிட நுழைவுக்கட்டணம் செலுத்தாமல் 18 வயதுக்குட்பட்டவர்கள் இலவச அனுமதி வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசியப் பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இதன் நோக்கமெனவும் குறிப்பிட்ட நிபந்தனைகளின்கீழ் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கும் நுழைவு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை



கொழும்பு, ஓக.6

தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் எச். எஸ். துய்யகொந்த தெரிவித்துள்ளார்.

பாதாளக்குழுக்களை பொறுத்தவரையில் பாதுகாப்பு அமைச்சு கட்டுப்படுத்திவருகின்றது. இராணுவ ஒத்துழைப்பு தேவைப்படும் பட்சத்தில் சட்டநியதிகளுக்கு உட்பட்ட வகையில் அதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும். எனவே தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. பாதாளக்குழுக்களுக்கு அரசியல் பாதுகாப்பு தற்போது இல்லாமற்போயுள்ளது. இதனால் அக்குழுக்கள் குழப்பமடைந்துள்ளன.

பாதாளக்குழுக்கள் ஒடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமதேனுவில் நல்லூரான்





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருடாந்தத் திருவிழாவின் ஏழாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம் பெற்றது. இதன்போது காமதேனு வாகனத்தில் நல்லூர்க் கந்த வேற்பெருமானும், பசு வாகனத்தில் வள்ளி தெய்வயானை நாயகியரும் உள்வீதி, வெளிவீதி வலம்வந்தனர். (ச-41-66)

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.6

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் சிவ குரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று புதன்கிழமை இரவு 8 மணிமுதல் 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "நடந்து நடந்து பாடுவோம்" எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றவுள்ளார். (ச-41-66)

## தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.6

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் ஒன்பதாம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேதாந்தமடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, கோப்பாய் வீரபத்திரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பிரண. கிருபாகரக் குருக்கள் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது திருக்கயிலாயப் பரம்பரை ஸ்ரீ கந்தப்பரம்பரை சூரியனார் கோயில் ஆதீன ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகளின் திருவருள் உரையோடு கூடிய திருப்பாசுர இசைநிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேலும், சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவின் தொல்புரம், ஆதிமுத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை, வட்டுக்கோட்டை வடக்கு, கற்பகப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை மற்றும் தொல்புரம் மேற்கு, ஜெகஜோதி அம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், திருமதி கமலராணி பாஸ்கரநாத சர்மாவின் நெறியாள்கையில் செல்வி ந.மதுராங்கனி, செல்வி ந.அக்சலா ஆகியோரின் இசை அரங்கு நிகழ்வும், கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் வாத்திய பிருந்தா இசைநிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## முழுநிலாக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.6

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30மணி தொடக்கம் 6மணிவரை சனசமூக நிலையமேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் "பூமாதேவி என்ற பேருயிர்' எனும் தொனிப் பொருளில் கருத்துரை ஆற்றவுள்ளார். (ச-41)

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவி சங்கீதா ரமேஷ் 2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சா/தரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறு பெற்று சாதனை படைத்தமைக்காக ஆசிரியர் கழகத்தால் கௌரவிக்கப்பட்டார். (ச-41)



## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.6

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணபடனத்தொடரின் 33ஆவது சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், இளஞ் சைவப்புலவர், பிரசங்கவாரிதி ச.நவநீதன் "வரம்பெறு படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றுவர். (ச-41)




## நீதிகொண்டு உலாவருக முருகா

வக்கிர புத்தியும் வன்புணர்வும் நாட்டில்
விஷமாகி விதியாகி விடுகிறதே முருகா
வாழவேண்டிய மனிதர்கள் போதைவசமாகி
வம்சங்கள் அடியோடு அழிகிறதே முருகா
அக்கினி சாட்சியான குடும்பங்கள் பலவோ
அழகலாதன செய்து அகப்படுகின்றனரே முருகா
செம்மணியைக் கடந்து செல்ல முடியவில்லை
அதற்கொரு நீதிகொண்டு உலாவருக முருகா

கே.எஸ்.சிவஞானராஜா

## நீலமயிலழகன் அலங்கார வேலனாய் வீதிவலம் வருகிறான்

வள்ளி தெய்வானையுடனுறை வடிவேலன்
புள்ளிமயில் மீதினிலே வீதி வருகின்றான்
தெள்ளுதமிழ் திருமுறைகள் வேதங்கள்
மங்களவாத்தியங்கள் முழங்கிடவே
வள்ளல் குமரன் வீதி வருகின்றான்
தேமதுர மணங்கலந்த தசாங்க
தேவதாருசாம்பிராணி நறுவணம்
நாலாவீதியும் கலந்திடும் நிதம் அடியவர்
நேர்த்திக்கடன் ஏற்றிடவே நீலமயிலழகன்
அலங்காரவேலனாய் வீதி வருகின்றான்

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை.

## நலமளிக்கும் நாயகனே

ஆடிவரும் மயிலேறும்
ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியோடு
மண்ணிலேமறைய
கோடிமுறை உனைப்பணிந்தோம்
கோமகனே முருகா
கொண்டவள்ளி தெய்வானை
உடனுறையும் மணவாளா

பாடியுனைப் பணிந்தோம்
பாலகனே வேலவனே
பக்தர்களின் குறைதீர்க்கும்
பாங்கான ஞானவனே
நாடிவரும் அடியவருக்கு
நலமளிக்கும் நாயகனே
நல்வரம் ஈர்ந்து
நம் மண்ணை காத்திடையா
நல்லூரானே..

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பரபரப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும்.

**மகரம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.6

'உலகளாவிய பாரம்பரிய நடன விழா- 2025' வின் சிறப்பம்சமாக லண்டனில் செயற்படும் ' சாஸ்வதம்' அமைப்பின் அனுசரணையுடன் திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன மாணவிகள் மூவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.



கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியரான ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவிகளான ஜனுக்சா வெஸ்லி ஜுட்ஸன், றக்சிகா ரஜிகரன், ஜெனிலியா யூட் கிறிஸ்ரியன் ஆகியோரே அரங்கேற்றத்தை மேற்கொள்ளவுள்ளனர். இந்தியா, சென்னை கலாஷேத்ரா அறக்கட்டளையின் முன்னாள் முதல்வரும் ஓய்வுநிலைப் பேராசிரியருமான ஏ.ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா, சிறப்பு விருந்தினராக திருமறைக்கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் மற்றும் சாஸ்வதம் அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது நடனத்துறை சார்ந்த 15 வரையிலான மூத்தகலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எம்.பி.க்களுக்கான காப்பீடும் மட்டுப்பாடு

கொழும்பு, ஓக.6

**நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான காப்புறுதிக் காப்பீட்டை ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரமாக மட்டுப்படுத்தி கூட்டுக் காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடமொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபா உயர்ந்த பட்ச காப்புறுதிக் காப்பீட்டின் கீழ்கூட்டுக்காப்புறுதிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு 2023ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டமைக்கமைய கடந்த காலப் பகுதியில் குறித்த காப்புறுதிக் காப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்ற போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படுகின்ற ரூபா 1000,000 காப்புறுதிக் காப்பீட்டு எல்லையை 250,000 ரூபாவாகக் குறைப்பதற்கு ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். அதற்கமைய, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கின்ற காப்புறுதி ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான காப்புறுதிக் காப்பீட்டு அனுகூலம் 250,000 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)


## ஒருவழிப்பாதையாக மின்சாரநிலைய வீதி

யாழ்ப்பாணம், ஓக.6

யாழ்.மாநகரசபையால் யாழ்.நகரின் மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி ஒருவழிப்பாதையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமைமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதற்கான வீதிக்குறியீடும் அங்கு நடப்பட்டுள்ளது. (ச-25, 17)




## வீட்டின் மீது தாக்குதல்; இருவர் கைது

கொடிகாமம், ஓக.6

மிருசுவில் பகுதியில் வீடொன்றின்மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-159)

## மரக்கறி விலை சரிவு

யாழ்ப்பாணம், ஓக.6

யாழ்.குடாநாட்டில் மரக்கறிகளின் விலை திடீரெனச் சரிவடைந்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ கத்தரிக்காய் 180 ரூபாவாகவும், பூசணிக்காய் 80 ரூபாவாகவும், தக்காளி 150 ரூபாவாகவும், பயிற்றை 150 ரூபாவாகவும், வெண்டி 100 ரூபாவாகவும், புடலங்காய் 80 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு 150 ரூபாவாகவும், பச்சை மிளகாய் 150 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-25, 17)



## சுற்றுலாவிகளுக்கு 'லைசென்ஸ்' ஓட்டோ சாரதிகள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.6

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வாகனம் ஓட்டும் உரிமம் வழங்கும் அரசாங்கத்தின் புதிய திட்டத்துக்கு முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வாகனம் ஓட்டும் உரிமம் வழங்குவதால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள உள்ளூர் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

இந்தத் திட்டம், சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள பலரின் வேலைவாய்ப்பை இழக்கச் செய்யும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## இணைய சூதாட்டம்; 11 இந்தியர்கள் கைது

கொழும்பு, ஓக.6

இணைய சூதாட்டத்தில் ஈடுபட்ட இந்தியாவைச் சேர்ந்த 11 பேரை தலங்கமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது இணைய சூதாட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



## ஆக்கப் பொறுத்தவை ஆறப் பொறுக்கேலை

ஆயிரம் பொய்யைச் சொல்லியெண்டாலும் கலியாணத்தைச் செய்யலாம். அதில பிரச்சினையில்லை. ஆனால் ஐ.நா.வுக்குக் கடிதம் எழுதிறதில ஆயிரம் பொய் சொல்லுறதுதான் பிரச்சினை. போர்க்குற்றம் செய்த இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில நிப்பாட்டச் சொல்லி ஐ.நா.வுக்குக் கடிதமொண்டு எழுதினவையெல்லோ. உண்மையில உருப்படியான ஒரு விசயம். இப்பிடிச் சின்னச் சின்னதா எண்டாலும் நாங்கள் ஏதும் செய்துகொண்டிருந்தால்தான் ஐ.நா.வும் ஏதும் எங்களுக்கு நீதி கிடைக்க வழிசெய்யப்பாக்கும். எலக்சன் கேட்டு வெண்டதோட தமிழ்த் தேசிய அரசியல் முடிஞ்சுது எண்டு மூலைக்குள்ள இருந்தால், கடைசியா எங்கட சனம் முக்காடுதான் போடோணும். ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விசம் எண்டு நேற்றும் பட்சி சொன்னது. அதைமாதிரி உப்பிடி உருப்படியான கடிதத்தையே ஒண்டுமில்லாமல் ஆக்கிறமாதிரி ஒரு காரியம் நடந்திட்டுது. அந்தக் கடிதத்தில நூற்றிச் சொச்சம் பொது அமைப்புகளும் கையெழுத்து வைச்சவை எண்டு, அந்தந்த அமைப்புகளின்ர பேர் போட்டிருந்தவை. ஆனால் அந்தக் கடிதம் நேற்று வெளியால வந்தபிறகுதான் தங்கட அமைப்பும் அதில கையெழுத்து வைச்சிருக்கு எண்டு கனபேருக்குத் தெரியவந்திருக்குது. உடனேயே அவையள் தங்களுக்குச் சொல்லாமல் மற்றவையள் கையெழுத்து வைச்சுப்போட்டினமோ எண்ட சந்தேகத்தில எல்லாரையும் விசாரிச்சுப் பார்த்திருக்கினம். அவையளும் " நாங்கள் கையெழுத்து வைக்கேலை. இப்ப வட்ஸப்பில வந்த கடிதத்தைப் பார்த்த பிறகுதான் எங்களுக்கே விசயம் தெரியும்" எண்டு கற்பூரத்தைக் கொளுத்தி சத்தியம் செய்திருக்கினம். இப்பிடி ஒண்டிரண்டில்ல ஊரிப்பட்ட அமைப்புகள் "நாங்கள் கையெழுத்து வைக்காமலே எங்கட பேரையும் எண்ணுக்கணக்குக்குச் சேர்த்திருக்கினம்" எண்டு முந்தநாள் இரவிரவா ஒரே கூப்பாடு. ஒருகட்டத்தில ஒரு ஊடக அமைப்பு "தங்கட அரசியலுக்காக எங்கட பேரைப் பாவிச்சது பிழை" எண்டு தடாலடியா அறிக்கையெல்லாம்விட , கடிதத்தை எழுதி அனுப்பிறதில 'முன்னணியில' நிண்டவை ஆடிப்போட்டினம்.

இப்பிடியே விட்டால், கடிதமே பொய்யெண்டு சனமும், ஐ.நா.வும் நினைச்சிடுவினமோ எண்ட பயத்தில உடனேயே ஒரு வொய்ஸ் மெசெஜ் விட்டவை "என்னென்ன பொது அமைப்புகள் எண்டு பேரைப் போடாமல், எத்தினை பொது அமைப்புகள் எண்டு எண்ணிக்கையை மட்டும் போடுவம்" எண்டு சமாளிப்புகேசன் செய்யிறமாதிரி இருந்தது அந்த வொய்ஸ் மெசெஜ். குத்துமதிப்பா பொது அமைப்புகளின்ர எண்ணிக்கையைப் போட்டால், அது மொட்டைக்கடிதம் மாதிரியெல்லோ இருக்கும். அந்தக் கடிதத்தில பேர் குறிப்பிட்ட அமைப்புகளிட்ட முறைப்படி கேட்டிருந்தா அவையும் சைன் வைச்சிருப்பினம். இப்பிடிப் பிரச்சினையளும் வந்திருக்காது. இது ஆக்கப் பொறுத்தவை ஆறப்பொறுக்காமல் அவசரப்பட்டு அந்தக் கடிதத்தை 'பப்ளிக்' பண்ணி, அனுப்ப வெளிக்கிட்டதாலதான் இப்பிடிக் குளறுபடி வந்ததெண்டு சொல்லுகினம். நன்றே செய்யத்தான் வேணும், அதையும் இன்றே செய்யத்தான் வேணும், அதுக்காக இப்பிடி அளாப்பி விளையாட்டெல்லாம் செய்யக்கூடாது கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகநாதம் சாயுச்சியம் பெற்றது

## கவிஞர், கலைஞானி
## ஸ்தபதி தவத்திரு சபரிவாச ஐயப்ப
# செல்லப்பா - சண்முகநாதன் ஆச்சாரியார்
## (கலாலயா ஷேத்திர குரு முதல்வர்)

மலர்வு
**04.04.1953**

உதிர்வு
**02.08.2025**








யாழ்ப்பாணம் மயிலிட்டியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த ஸ்தபதியார் செல்லப்பா - சண்முகநாதன் ஆச்சாரியார் அவர்கள் 02.08.2025 சனிக்கிழமை அன்று சரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (பிள்ளையார்) - இரத்தினம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைஞர்திலகம் நவரத்தினம் அவர்களின் மாணவனும், பராசக்தியின் அன்புக் கணவரும், கஜேந்திரன், ஜெயந்திரன், நிவாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகன்நாராவின் அன்பு மாமனாரும், தணிகையின் அருமைப் பேரனும், தியாகராசா, காலஞ்சென்ற சிவரத்தினசிங்கம் (குட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உலகேஸ்வரி, செல்வாம்பிகை, பாலசுப்பிரமணியம், கமலாதேவி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயநிர்மலா, ஜனார்த்தனி ஆகியோரின் அன்புச் சகலனும், யதுர்சிகனின் அன்புப் பெரியப்பாவும், டிலக்சன், அபிலாஸ், சஸ்திகா, பிரியந், பவிசன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மயிலிட்டி கொற்றாவத்தை இந்து மயானத்திற்கு புகமுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**(கலாலயா - மயிலிட்டி)**
**077 338 5353**

(CS 3783) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# நீதி உறங்காது

கிருஷாந்தி கொலைவழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் சோமரத்ன ராஜபக்சவின் மனைவி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதிய கடிதம், தமிழ் மக்களின் கோரிக்கையின் நியாயத்தை -தமிழ் மக்கள் ஏன் சர்வதேச விசாரணைப் பொறி முறையைக் கோருகின்றனர் என்பதைப் புலப்படுத்தியிருக்கின்றது. கிருஷாந்தி கொலைவழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் சோமரத்ன ராஜபக்சவின் மனைவி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள அந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களே சோமரத்ன ராஜபக்ச மனதிலும் உள்ளன என்று கருதலாம். அந்தக் கடிதத்தில், சோமரத்ன ராஜபக்சவுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும், தண்டிக்கப்பட வேண்டிய உயர் அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லை என்றும் இலங்கையின் நீதி விசாரணையில் நம்பிக்கை இல்லை, சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால் சாட்சியமளிக்க சோமரத்ன ராஜபக்ச தயார் என்றும் அவரது மனைவி குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையில் உள்நாட்டுப்போர் நடந்த காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கடுமையான அடக்குமுறைகள் பயன்படுத்தப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டவாட்சி இல்லாமல் செய்யப்பட்டு, இராணுவமே தீர்மானம் மிக்க சக்தியாகவிருந்தது. அந்தக்காலகட்டத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், கடத்தப்பட்டார்கள், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர், நியாயமான காரணங்கள் இன்றிச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அதேபோன்று இறுதிப்போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் இலங்கைப் படையினரால் இழைக்கப்பட்டன என்பதற்கான - போர்க்குற்றங்கள் நடந்திருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் வெளியாகியிருந்தன. ஆனால் குற்றங் களில் ஈடுபட்ட எவரும் இதுவரையில் தண்டிக்கப்படவில்லை -விசாரணைக்குட்படுத்தப்படவில்லை.

இலங்கையின் உள்நாட்டு நீதிப்பொறிமுறைமீது நம்பிக்கை இழந்திருக்கும் தமிழ்மக்கள், இந்த விவகாரங்கள் சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரிக்கப்பட்டால் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்டும் என்று திடமாக நம்புகின்றனர். குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினரைக் காப்பாற்றும் இலங்கையின் முயற்சிகள் - குற்றங்களில் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் இராணுவ உயர் அதிகாரிகள் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டு அவர்களைப் பாதுகாக்கும் முனைப்புகள் - குற்றங்களில் ஈடுபட்டமைக்காக இதுவரை எவரும் தண்டிக்கப்படாத நிலைமை என்பனவே தமிழ்மக்கள் உள்நாட்டுப் பொறிமுறை மீது நம்பிக்கையிழப்பதற்கான பிரதான காரணங்களாக இருக்கின்றன.

ஆனால், இலங்கையில் ஆட்சிக்குவரும் அரசாங்கங்கள் இந்தக் குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியமற்றது என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன. உள்நாட்டு விசாரணைப்பொறிமுறைமூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என்று கூறும் இலங்கை, அதற்கான சிறுநகர்வையேனும் இதுவரையில் எடுத்துவைக்கவில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யும் - நீர்த்துப்போகச்செய்து மறக்கடிக்கும் முயற்சிகளிலேயே தீவிரமாகவிருக்கின்றது. அதேநேரம் சர்வதேச விசாரணைப்பொறிமுறை கோரும் தமிழ்மக்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை திரிவுபடுத்தி பிழையாகவும் சித்தரிக்கின்றது. குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றும் போக்குத் தொடரும் மட்டும் உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். சோமரத்ன ராஜபக்சவின் மனைவி எழுதியுள்ள கடிதம், அதையே வெளிப்படுத்திநிற்கின்றது.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## நாளொரு நல்வார்த்தை

பொதுவாக தலைசிறந்த அறிவு என்னவென்றால் உறுதியாகத் தீர்மானித்தலே.

– நெப்போலியன்




# நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு ஐ.நா.விடமிருந்து உதவி

## அமைச்சரவை அனுமதி



கொழும்பு, ஓக.6

நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அதற்குத் தேவையான தொழில்நுட்ப, விநியோக, நிதி மற்றும் நிர்வாக ஒத்துழைப்புகளை ஐ.நா. அலுவலகத்தின்மூலம் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டின் முதலாம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்குமான அதிகாரம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைகின்ற படிமுறைகளைத் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், தயாரித்துள்ளது.

அதற்கமைய பல்துறைசார் அணுகுமுறைமூலம் 2025-2029 காலப் பகுதிக்கான நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அதற்குரிய அமைச்சுகள் மற்றும் நிரல் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய அமைச்சுகளுக்கு இடையிலான செயலணியொன்றை தாபிப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப, விநியோக, நிதி மற்றும் நிர்வாக ஒத்துழைப்புகளை இலங்கையில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது- என்றார். (ச-44)

# அத்துமீறிய மீன்பிடி; 4 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஓக.6

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றப் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் நான்கு இந்தியாவின் தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

# புதுமணத் தம்பதிகளுக்கு வீடு கட்ட கடன்திட்டம்!



கொழும்பு, ஓக.6

இலங்கையில் புதிதாகதிருமணமான தம்பதிகளுக்கு வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. குறித்த விடயத்தை வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். திருமணத்திற்குப் பின்னர் தங்கள் சொந்த வீட்டில் வாழ விரும்பும் இளம் தலைமுறையினரின் கனவை இந்தத் திட்டம் நிறைவேற்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# முப்படையிலிருந்து தப்பியோடிய 3,504 பேர் கைது

கொழும்பு, ஓக.6

கடந்த பெப்ரவரி மாதம் 22 முதல் ஓகஸ்ட் 3 வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில், சட்டவிரோதமாக சேவையை விட்டு வெளியேறிய 3 ஆயிரத்து 504 முப்படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 2,937 இராணுவ சிப்பாய்கள், 289 கடற்படையினர், மற்றும் 278 விமானப்படையினர் உள்ளடங்குகின்றனர் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

வியாழக்கிழமை - ஆடி 22

07.08.2025

சுபநேரம் : 07.34 - 09.04

ராகுகாலம் : 01.34 - 03.04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசியல் பன்முகத்தன்மை இளைஞர்களுக்குப் பயிற்சி



கிளிநொச்சி, ஓக.6

ஐரோப்பிய யூனியனின் நிதிப்பங்களிப்பில் 'இலங்கை ஒன்றுபடுகிறது' எனும் அமைப்பின் வழியாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றமான அரசியல் பன்முகத்தன்மைப் பயிற்சி கடந்த ஒரு வருடமாக நடைபெற்றுவந்தது.

அதன் இறுதிநிகழ்வாக சான்றிதழ் வழங்கும் விழா மற்றும் இளைஞர் கலந்துரையாடல் கிளிநொச்சியில் இலங்கை ஒன்றுபடுகிறது அமைப்பின் வடமாகாண நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தப் பயிற்சிநெறியின் நோக்கம் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்களை அரசியல் விழிப்புணர்வு, ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் மனித உரிமைக்கற்றல் போன்ற துறைகளில் திறமையுள்ளவர் ஆக்குவதாகும். (ச-41-27)



# தேசியமட்ட கடினப்பந்து வடக்கு மூன்றாமிடம்!

கிளிநொச்சி, ஓக.6

தேசியமட்ட கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டியில் வரலாற்றில் முதற்தடவையாக வடமாகாண அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

குறித்த வடக்கு மாகாண அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 12 வீரர்களும் , யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 2 வீரர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வீரரும் இடம்பிடித்திருந்தனர்.

குறித்த வீரர்களை வரவேற்கும் நிகழ்வு கிளிநொச்சி பேருந்துநிலையத்திலிருந்து மத்திய கல்லூரி வரை இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-41-113)



மலையகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 11 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியுதவி கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (ச-25, 66)

# சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக்காணி இவ்வாண்டுக்குள் அடிக்கல் நடுக!

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்து!

யாழ்ப்பாணம், ஓக.6

சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக்குப் பொருத்தமான காணியை சாவகச்சேரிப் பிரதேச செயலாளர், சாவகச்சேரி நகரசபையினர், சமுர்த்தித் திணைக்களத்தினர் ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து அடையாளப்படுத்தி அதனைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை இரண்டு மாதங்களுக்குள் நிறைவுசெய்யுமாறும் இந்த ஆண்டு இறுதிக்குள் வங்கிக் கட்டடத்துக்குரிய அடிக்கல் நடுகைசெய்யப்படவேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக்குரிய காணி தொடர்பான விடயத்துக்கு நீண்டகாலம் இழுபறி நிலவிவந்த நிலையில் அது தொடர்பில் வடக்குமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கடந்த வியாழக்கிழமை நேரடியாகச் சென்று தொடர்புடைய தரப்புகளுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

சாவகச்சேரி நகரசபையின் சிறுவர் பூங்காவின் ஒரு பகுதிக் காணியை குறித்த வங்கிக்கு வழங்குவதாகக் கூறப்பட்டிருந்த நிலையில் அந்தக் காணியை ஆளுநர் முதலில் நேரில் சென்று பார்வையிட்டார். அந்தக் காணி சிறுவர் பூங்காவின் தொடர் அபிவிருத்திக்குத் தேவை எனவும், சாவகச்சேரி நகரத்துக்கு அண்மையாக தணங்கிளப்பு வீதி மகிழங்கேணியில் மாற்றுக்காணி வழங்கத் தயார் எனவும் நகரசபை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மாற்றுக்காணி தமக்குப் பொருத்தமில்லை எனவும், தமது வங்கிக்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்த அரச காணியை மீளவும் ஒப்படைக்குமாறும் சமுர்த்திச்சங்கப் பிரதிநிதிகளால் கூறப்பட்டது. இதனையடுத்து, பொருத்தமான மாற்றுக்காணியை சமுர்த்திச் சங்கத்தினர் அடையாளப்படுத்தி வழங்கினால் அதனைக் கொள்வனவுசெய்து வழங்கத் தயாரென சாவகச்சேரி நகரசபைப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இருதரப்பும் காணி தொடர்பான இணக்கத்துக்கு வராதநிலையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினை நீடித்துச்செல்லுவதைக் கருத்திலெடுத்த ஆளுநர், மக்கள் நலன்சார்ந்தே இரு தரப்பும் செயற்படுகிறதென்பதை நினைவிலிருத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - என்றார். (ச-28-159)

# INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 06.08.2025 until 19.08.2025 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 12.08.2025 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 20.08.2025 |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) in Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | PSDG/NP/MU/MEPS/2025/WM/01 | Construction Of Waste Collection Centre at Manthai East PS Head office | PSDG Fund | 1.27 | 49 | C9 above (Building) | 2,000.00 | 07-Oct-2025 | 19,100.00 | 04-Nov-2025 |
| 2 | PSDG/NP/MU/MEPS/2025/BH/01 | Renovation Of Bus Halts in Manthai East Pradeshiya Sabha Area | PSDG Fund | 0.42 | 49 | C9 above (Building) | 2,000.00 | 07-Oct-2025 | 6,400.00 | 04-Nov-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, E.mail: manthaieastps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Manthai East and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam, Naddankandal.

06.08.2025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வேலணை - பெருங்குளம்

# முத்துமாரி அம்மன் திருக்கோயில்

# வருடாந்த மஹோற்சவம்

## விசுவாவசு வருடம் - 2025

"வேலணை யூராள் விளங்கு பெருங்குளத்தின் பால்
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து"

## தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா

**08.08.2025 -** வெள்ளிக்கிழமை காலை 07.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 09.30மணிக்கு திருத்தேரில் பவனிவருதற்கு அம்மன் எழுந்தருளல்

**09.08.2025 -** சனிக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்

அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு தேரில் பவனிவரும் எம் குலதெய்வமாகிய முத்துமாரி அம்மனைத் தரிசிப்பதுடன் மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன் கருதி 776 - குறிகாட்டுவான், 780 - ஊர்காவற்றுறை வழித்தடத்தில் ஈடுபடும் பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகள் தங்களது அர்ப்பணிப்புடனான பொதுநலத்துடன் கூடிய சேவையை அம்மன் ஆலயம் வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வேலணை.** **தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.**

(CS/59031) J-1

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

**இயக்கச்சி சந்தைக் கடைத் தொகுதியிலுள்ள கடை இல PS-09,VS-04 ஆகிய கடைகளை 01.09.2025 ஆம் திகதி தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 06.08.2025 தொடக்கம் 19.08.2025 வரை(அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 20.08.2025 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 21.08.2025 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | PS - 09 | 8400.00 | 1000.00 | 2,000.00 |
| 2. | VS - 04 | 6400.00 | 1000.00 | 2000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 20.08.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரச உத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தை முழுமயாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை 02 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. VS - 04 கடையானது மரக்கறி வியாபாரம் மற்றும் பழவியாபாரத்திற்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

06.08.2025

## கைதடி தெற்கு சனசமூக நிலையம்
## 70 வது அகவை விளையாட்டு விழா



எமது சனசமூக நிலையத்தின் 70வது அகவை விழாவை முன்னிட்டு எதிர்வரும் 11.08.2025 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் மாவட்ட ரீதியிலான மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 12.08.2025 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு

யாழ் மாவட்ட ரீதியிலான துவிச்சக்கரவண்டி, ஓட்டப்போட்டி என்பன நடைபெறவுள்ளதால் கலந்து கொள்ளுவோர் பிறப்பிடம், வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். யாழ் மாவட்டத்தில் வதியும் போட்டியாளர்கள் எதிர்வரும் 10.08.2025 ற்கு முன் பதிவினை செய்து கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

| தலைவர் | தொடர்புகளுக்கு: | செயலாளர் |
|---|---|---|
| R.சிவகாந்தன் | 077 498 5544<br>077 791 7732 | S.ஜெயகுமார் |

(CS/59025) J-1

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஓக.6*

தெல்லிப்பளை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடாத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச்சொற் பொழிவுத்தொடர்-17 நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரனின் "எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் புராணம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட்டுக்கோட்டை - துறட்டிப்பனை

# ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## விசுவாசு வருஷம் (2025 ஆம் ஆண்டு)

# மகோற்சவ விஞ்ஞாபனம்

# தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ்

**(06.08.2025 - புதன்கிழமை மதியம் - 2.00 மணி)**

### ஆலயச்சிறப்பு

குமரி மாநிலத்தில் பிரமதண்டம் முள்ளந்தண்டு போல் விளங்கும் மேருமலையின் குறியை காணலாம் என திருமூலர் கூறும் இலங்கை திருநாட்டில் மகுடம் என விளங்கும் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை எனும் திருப்பதியில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் நடுவான் சீதாளதேவி பொன்வண்ணப் பேரழகி முத்துமாரி அம்பாள் வேண்டும் வண்ணம் அருள் பாலிக்கின்றாள். அப்பெரும் தாய்க்கு 06.08.2025 புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக வடிவமைக்கப்பட்ட தசகோண பவள பத்திரக கலிங்கமரபு சித்திர தேர் வெள்ளோட்டம் காண திருவருள் கைகூடியுள்ளது.

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்காபுரியின் வடபுலத்தின் கிரமமாக விளங்கும் யாழ்ப்பாண தீபகற்பத்தின் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வட்டுக்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பல்நெடும் காலமாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் வட்டுக்கோட்டை- துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மஹோற்சவ பெருவிழா கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பிரதேச செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதில் தேர் திருவிழா என்பது முக்கியமானதொன்றாகும். இவ்வாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேரின் வெள்ளோட்டம் நடைபெறுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனவே நீண்ட காலமாக முறையான நிர்வாக சபை அமைக்கப்பட்டாமல் இருந்து 2024ல் புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தற்போது உள்ள நிர்வாகத்தினர் புதிதாக தேர் ஒன்றை அமைத்து வெள்ளோட்டம் விடுவது என்பது சிறப்பான ஒரு விடயமாகும். இவ் ஆலயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றி வரும் ஆலய பரிபாலன சபையினர் தமது அயராத உழைப்பின் மூலம் இன்று இவ்விழாவினை சிறப்புற ஒழுங்குபடுத்தி யுள்ளனர். இந்நந்நாளில் அடியவர்களின் வாழ்வில் இன்னல்கள் நீங்கி அறநெறி மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஆற்றலை அருளும் வகையில் எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆசியை வேண்டுவதுடன் இவ் மஹோற்சவத்தை முன்னெடுக்கும் ஆலய அறங்காவலர் சபை. அந்தண சிவாச்சாரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரதேச செயலாளர்.**
**சங்கானை.**

### தலைவரின் வாழ்த்துச்செய்தி



எமது ஆலய தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ் வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். "என் கடன் அவள் பணிசெய்து கிடப்பதே" என்பதற்கிணங்க வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்க ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளூர். வெளியூர் தர்ம உள்ளம் கோண்ட அடியவர்கள் அனைவரையும் முதலில் பணிந்து அவர்களுக்கு எம் மனமார்ந்த கோடி நன்றிகள்.இன்று தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இச்செயல் அம்பாளின் அருள் அன்றி வேறெதுவும் இல்லை. எம்மை கருவியாகப் பயன்படுத்தி தனக்கு தேவையானதை தானே பெற்றுக் கொண்டாள் என்பதே உண்மை. தேர். தரிப்பிடம் என்பன அமைந்திருப்பது எம் எல்லோர் மனங்களிலும் பெரும் மன நிறைவைத்தருகின்றது. இது எமது கிராம மக்களின் ஒற்றுமையை பறை சாற்றுகின்றது. உங்களது ஆன்மிகப் பணியால் இன்று எமது ஆலயம் துரிதகதியில் பெருவளர்ச்சி அடைந்துவருகின்றது. இன்றைய தசகோண சிற்பத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற அடியவர்களுடன் நாமும் வாழ்த்துவதோடு இக் கைங்காரிய இறை பணியில் எம்மோடு பயணிக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகை புரண அருளாட்சி அமைந்ததே அழகுறு தேரது
தும்பிமுகன் தாயவள் தொன்மை ஊரினில் துறட்டிப் பனையில்
நம்பிக்கைப் பிராட்டி நாயகி முத்துமாரி நயந்த தேரினை
தம்கை கூப்பியே தளராது வணங்கிட வாரீர் வாரீர்

**தலைவர்**
**இ.சிவகுமார்**
**வட்டுக்கிழக்கு துறட்டிப்ப்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரிபாலனசபை.**

### ஆச்சாரியாரின் வாழ்த்துச் செய்தி



எல்லாம் வல்ல வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதார விந்தங்களை இருகரம் இறுகப் பற்றி வணங்குகிறோம்.

இவ் ஆலயத்தில் முன்னய காலங்களிள் மூன்று வாகனங்களை எமது கைவண்ணத்தில் உருவாக்கினோம். அதனைத் தொடர்ந்து ஆலய அன்னதான சபை மற்றும் சபை தலைவர் இரத்தினதுரை சிவகுமார் அவர்களின் வேண்டுதலின் பேரில் 2025 ம் ஆண்டு ஆடி பௌர்ணமி தினத்தில் ( தசகோண ) திராவிரமரபு சிற்பத்தேரை நிர்மானிப்பதற்கு அங்குரார்ப்பண நிகழ்வும் ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தொடர்ந்து வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அன்னை முத்துமாரி தாயின் அனுக்கிரகத்தால் எனது சிந்தனையில் (தசகோண ) கலிங்க மரபுத் தேரை நிர்மானிக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு சபையின்ரின் பெரும் ஆதரவும் வழங்கப்பட்டு இத் தேரின் வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகி இன்றய தினம் வெள்ளோட்டம் காணுகின்ற பெரும் பேறை அடியேனும் பெற்றுள்ளேன்.

சுபம்

**A.T. P கோகுலன் ஸ்தபதி**
**ஸ்ரீ குலவாணி சிற்பாலயம்,**
**திருநெல்வேலி.**

### தேரின் மகிமை

ஆலய விழாவாக தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பதைப் போல் நமக்குள்ளும் இறைவனின் விம்பம் இருக்கிறது. தேரை இழுப்பதைப் போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. ஊர்வலம் முடிந்தவுடன் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கையை முடித்த நமது ஆத்மாவும் அதுவரை வாழ்த்த உடலை விட்டு இறைவனிடம் திரும்பிவிடுகிறது.

கோயிலும் தேரும் இறைவன் உறையும் இடம். தேர் அனைத்து மக்களையும் சந்திக்க வைத்து உறவாட வைக்கும் ஒரு சமுதாய கேந்திரமாகவும் பயன்படும். உயர்ந்த எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள பயன்படும். ஊரை ஒற்றுமையாகக் கூட்டி வைக்க கூடிவாழச் செய்ய மக்களின் ஒற்றுமை சின்னமும் தேர் ஆகும். மக்களுக்கு ஆனந்தத்தையும் பக்தியையும் இது ஏற்படுத்தும். அது போல் இன்னுமொன்று. ஆண்டுதோறும் தெருவில் தேர் ஓடுவதால் தெருப்பராமரிப்பு நடக்கும். வியாபாரம் பெருகவும். சிறு வியாபாரிகள் பயன் அடையவும், குடிசைத் தொழில் செய்பவர்கள் விற்பனை செய்யவும் வாய்ப்பு கிடைக்கிறது. இப்படியான தேரை அன்பு நிறைந்த உள்ளத்துடன் நம்பிக்கையோடும் பக்தியோடும். வணங்கி இறைவனின் அருளைப் பெறுவோமாக.

### குருக்களின் ஆசியுரை



அம்பிகை அடியார்களே !

திருவருள் நிறைந்த துறட்டிபனை என்னும் பதியில் குடி கொண்டு அருள் புரியும் அகில புவன மாதா முத்துமாரி அம்பாளின் ஆலயத்தில் அன்னைக்கு புதிய சித்திரத்தேர் அமையப் பெற்றது மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். மஹோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா மிகவும் முக்கியமானதும் மேன்மை பொருத்தியதுமான பல வடிவான கோணங்களில் தேரின் அமைப்புக்களை ஆகமங்களில் காணமுடிகிறது. எம்பிராட்டி தேரில் ஏறிவரும் போது அடியார்களுக்கு சாம்பவ தீட்க்ஷை வழங்குவார். "ராதா ரோகண காலே சர்வகாம பலப்பிரதம் ஆயள் விருத்தி காம் சைவ ஆரோக்கியம் புஷ்டி வர்த்தனம்" என்பது ஆகம வாக்கியம் இரண்டின் படி அம்பிகை (சுவாமி) தேரில் ஏறி வரும் காட்சியைப் பார்த்தால் எல்லா விருப்பங்களும் நிறை வேறும் நீண்ட ஆயுள் கிடைக்கும் வியாதிகள் நீங்கும். திடகாத்திரமான தேகம் உண்டாகும் என காண்க தேரின் உள்ளே கிழக்கு பாகத்தில் முருகப் பெருமானும் தென் பாகத்தில் தட்சணாமூர்த்தியும். மேற்குப் பாகத்தில் மஹா விஷ்ணுவும். வட பாகத்தில் பிரம்ம தேவரும். சக்கரங்களில் ஆர்ய சந்திரர்களும். அஸ்டராகங்களும். சதுர் வேதங்களும் நிறைவாக அமைவதாக (உத்தரகாரண) ஆகமம் கூறுகிறது தேர் வெள்ளோட்டம் கண்டபின் ஆச்சார்யார் ரதப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அதில் மந்திர. பதபுவன. தத்துவங்கள் பூஜை செய்யப்படும். நிறைவாக சுப முகூர்த்த வேளையில் அம்பிகையை எழுந்தருள செய்து வேத்கோச. மங்கள வாத்தியம் திருமுறை சங்கு துண்துபி முதலான சர்வமங்கல வாத்தியங்கள் முழங்க கொடி குடை. ஆலவட்டம் சமர்ப்பித்து அம்பிகை மஹா ராஜ வீதியில் அழைத்து வர வேண்டும். என காண்க அம்பிகையின் இத்தேர் திருப்பணியை செய்தவர்கள் விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சகல நன்மைகளும் கிடைக்க பெற்று வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

**பிரதிஷ்டா இரத்தினம்,**
**சிவ ஸ்ரீ. சு. மதுசூதனக்குருக்கள் பிள்ளையார் கோவில், சித்தங்கேணி**

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது வட்டுக்கோட்டை துறட்டிப்பனையில் பதிகொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் : பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு அம்மாளின் தேர்வெள்ளோட்ட மலருக்கு வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் ஆலய செயலாளராகிய நான் பெருமையடைகின்றேன். தொன்று தொட்டு பலதரப்பட்ட வரலாற்று சிறப்பம்சங்களை எமது அம்பாளின் ஆலயமானது கொண்டுள்ளது. அத்தோடு எமது இளைஞர்களின் ஆன்மீக விழுமியங்கள் பற்றிய சிந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் எமது பயணத்தில் கற்று வருகிறார்கள். ஆலய அன்னதான சபையினரும் உள்ளூர். வெளியூர் மக்களும் இணைந்து கடந்து வந்த பயணத்தில் அம்பாளின் அருளாசியுடன் தேர் அமைப்பிற்கு உள்நாட்டு. வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவுடன் அம்பாளின் அருளாசியுடன் புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்கப்பட்டது என்பது பெருமையான ஒன்றாகும். தேர் வெள்ளோட்டம் சிறப்புற அமைய அம்பாளை வேண்டுவதோடு அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"வாரீர் வடம் பிடிப்போம் ஊர் கூடி**
**எம் பெருமாள் வரம் பெறுவோம்"**

**செயலாளர்**
**க.ஜெயக்குமார்**
**துறட்டிப்ப்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரிபாலனசபை.**

### ஆசிச் செய்தி



துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு ஆலய அன்னதான சபையினரின் அயராத முயற்சியின் பலனாக கலையம்சங்களோடு கூடிய தசகோண தேர் ஒன்று உருவாக்கப் பட்டிருக்கின்றது. இத் தேர் உருவாக்கிய ஸ்தபதி குழுவினருக்கும். தேர் உருவாகுவதற்கு பலவழிகளிலும் பேருதவிகள் புரிந்த எம் அம்பாளுடைய மீளா அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளது திருவருள் என்றென்றும் நிறைய வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசிகள்" கூறுவதில் மன மகிழ்வு கொள்கின்றோம்.


**ஆலய குரு**
**பிரம்மஸ்ரீ பா.அமிர்தேஸ்வரசர்மா**
**(துறட்டிப்பனைப்பதி, வட்டுக்கோட்டை)**

**புதிய சித்திரத்தேர் உபயம் - அன்னதானசபை,**
**தேர் தரிப்பிட உபயம் - சிவதர்மவள்ளல் இராசையா, ஈஸ்வரகுமாரன் குடும்பம்**
**வாழ்த்துவோர் - அன்னதான சபையினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 12 . 1949



மறைவு
02 . 08 . 2025

## அன்ரன் தனராசா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கோவில்புதுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் தனராசா கடந்த (02.08.2025 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பாக்கியம் தம்பதியரின் மருமகனும், பற்றிமாவின் அன்புக் கணவரும், பவானியின் சகோதரனும், ஜெகநாதனின் மைத்துனரும், மார்க்கஸ், காலஞ்சென்ற சகாய மார்சல் மற்றும் வேளாயினி, சிந்துஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனிகாந், ராஜினி ஆகியோரின் மாமனாரும், நிதுசன், கலிஸ்ரார், அபிஷேக், ஆகாஷ், அஷோர், ஜீவிதா, ஜீவாஞ்சலி ஆகியோரின் பேரனும், அஸ்ரித், ஆதீஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி புனித செபஸ்ரியார் தேவாலயத்தில் இன்று (06.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று, இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவிற்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 59032) A

# கூத்தாட்டு அவையின் ஊர் கூடி மகிழ்வோம்

கூத்தாட்டு அவைக்களத்தின் ஊர் கூடி மகிழ்வோம் நிகழ்வு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் காலை 9 மணிதொடக்கம் மாலை 7 மணிவரையும் பட்டறிவு, ஆட்டுக்குட்டி, இடுக்கண் வாருங் கால், முட்டை ஆகிய நாடகங்களின் அரங்கேற்றம் மாலை 5 மணிதொடக்கம் 7 மணிவரையும் இடம்பெறவுள்ளன. நிகழ்வுக்கான அனுமதி இலவசமென அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-41-159)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன் **சுபேந்திரனின்** பாசமிகு தாயார்

## திருமதி சின்னத்தம்பி செல்லம்மா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறையருள் வேண்டுகின்றோம்.

*வானம் இருண்டது, நிலவும் உறங்கியது, பூக்கள் வாடின*
*எம் நண்பனின் தாயார் போனபின்பு, அவன் சிரிப்பும் மறைந்தது*
*துயரத்தில் துவண்டாலும் சோகத்தில் கலங்கினாலும்*
*அவன் அம்மா தந்த தைரியம் என்றும் அவனை வழிநடத்தும்*

**-க.பொ.த சாதாரணதர 1994,**
**க.பொ.த உயர்தர 1997 பிரிவு நட்புகள்**

(CR 45717) A

# மரண அறிவித்தல்



## திலகவதி கந்தசாமி

மண்ணிற்கு 26.06.1933 — விண்ணிற்கு 04.08.2025

ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி கந்தசாமி (04.08.2025) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கவுணாவத்தை வைரவர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குகன் மற்றும் மாலதி, சபேசன், உஷாசுதாநிதி (உஷா), காலஞ்சென்ற உதயபானு (சேகர்) ஆகியோரின் தாயாரும், அகல்யா, கிருஷ்ணதாசன், நந்தினி, மகாதேவன், சுதர்சினி ஆகியோரின் மாமியும், வினோத், சதீஸ், அஜித்தா, சவிதா, ஆரூரன், மயூரன், ஆதிரை, அனுஷன், ஆரணி, சருண்யா, ஜோசிகா, லேணுகா ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், கியாறன், லிவ்யா ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தங்கத்துரை, மார்க்கண்டு, இராசதுரை ஆகியோரின் பாசமிகு தங்கையும், காலஞ்சென்றவர்களான கதிரேசர்பிள்ளை, கதிராசிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கச்சி, அருந்தவம் மற்றும் சோதிமயில் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
021 205 9406

தகவல் :
குடும்பத்தினர்

(CS 59033) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையறுள்ளது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமை புரியும் திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்ட 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தகமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 19 கிளைகளுக்குமான அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

கிளைப்பொதுக்கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2025.08.09 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி

| கிளை பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| அச்சுநகர் | 1 | திரு வீரசிங்கம் இரத்தினகாந்தன் | அச்சுநகர் கிளை 01 இன் கட்டடம் |
| பத்தமேனி | 2 | திரு கந்தசாமி சசிகரன் | பத்தமேனி கிளை 02 இன் கட்டடம் |
| தம்பாலை | 3 | திரு சிவசிதம்பரம் சிறீதரன் | தம்பாலை சிறிமுருகன் சனசமூகநிலையம் |
| இடைக்காடு | 4 | திரு சண்முகம் சசீந்திரன் | மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் |
| வளலாய் கிழக்கு | 5 | திரு பாலச்சந்திரன் பாலரவி | வளலாய் கிழக்கு கிளை 05 இன் கட்டடம் |
| வளலாய் மேற்கு | 6 | திரு சந்திரலிங்கம் சுவர்ணன் | வளலாய் மேற்கு பாரதி சனசமூக நிலையம் |
| புஸ்பவதி | 7 | திரு பாக்கியராசா குருபரன் | கதிரொளி சனசமூகநிலையம் அச்சுவெலி வடக்கு |
| அச்சுவேலி தெற்கு | 8 | திரு சிங்கராசா சியாந்தன் | அச்சுவேலி தெற்கு 08 இன் கிளைக் கட்டடம் |
| தோப்பு | 9 | திரு இ.வேல்குமார் | தோப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் |
| ஆவரங்கால் மேற்கு | 10 | திருமதி ஞா.ஜெயாமேரி கொன்சி | ஆவரங்கால் தெற்கு கிளையின் மேல்மாடிக் கட்டடம் |
| ஆவரங்கால் கிழக்கு | 11 | திருமதி ஞ. எமல்டா | ஆவரங்கால் கிழக்கு 11 இன் கிளைக் கட்டடம் |
| நவற்கிரி | 12 | திரு கனகரட்ணம் திசாகரன் | நவற்கிரி கிளை 12 இன் கட்டடம் |
| புத்தூர் மேற்கு | 13 | திரு ஜெ.சதீஸ் | புத்தூர் மேற்கு கிளை 13 இன் கட்டடம் |
| சிறுப்பிட்டி | 14 | திரு அ.ஜேம்சன் | சிறுப்பிட்டி கிளை 14 இன் கட்டடம் |
| சூரியோதயம் | 15 | திரு பொன்னம்பலம் கோகுலன் | சூரியோதயம் கிளை 15 இன் கட்டடம் |
| நாவற்காடு | 16 | திரு க.செந்தூரன் | நாவற்காடு கிளை 16 இன் கட்டடம் |
| வாதரவத்தை | 17 | திரு ம.கபிலன் | வாதவத்தை கிளை 17 இன் கட்டடம் |
| கதிரிப்பாய் | 18 | திரு தங்கராசா கண்ணதாசன் | கதிரிப்பாய் சுப்பிரமணிய சனசமூக நிலையம் |
| அச்சுவேலி வடக்கு | 19 | திரு அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | அச்சுவேலி வடக்கு கிளை19 இன் சங்க கடைத் தொகுதி 01 |
| விக்கினேஸ்வரா | 20 | திருமதி *சுகிர்தா | அச்சுவேலி விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் |
| ஆவரங்கால் வடக்கு | 21 | திரு வடிவேல் கிருசாந் | ஆவரங்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் மத்தி முன்பள்ளி |
| புத்தூர் கிழக்கு | 22 | திரு கணேஸ் சுரேஸ்பாபா | புத்தூர் கிழக்கு குமரகுருபரன் சனசமூகநிலையம் |
| கருகம்பை ஈஸ்வரன் | 23 | திரு சற்குணசிங்கம் பிறேமிலன் | தமிழாயம் மகாத்மாஜி சனசமூகநிலையம் |
| ஜனசக்தி | 24 | திரு இராஜசிவம் தனுசன் | ஜனசத்தி பொதுநோக்கு மண்டபம் |
| கலைமதி | 25 | திரு விநாசித்தம்பி சிவபாலன் | கலைமதி மக்கள் மண்டபம் |
| வளர்மதி | 26 | திரு சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | புத்தூர் வளர்மதி சனசமூகநிலையம் |

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இதில் இருவர் 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளர்களுக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்தப்படுவதுடன் சங்கச்செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் எவரேனும் கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு தகுதியுள்ள தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்காது விடினும் இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு தமக்குரிய கிளையின் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இல.857, கே.கே.எஸ். வீதி,
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

திரு.கி.சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## முழுநிலா சிறுவர் அரங்கம்

இணுவில் அறிவாலயத்தின் அனுசரணையில் முழுநிலா சிறுவர் அரங்கம் பௌர்ணமி நாளான நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இணுவில் அறிவாலய அரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் 2024 தேசிய நாடக விழாவில் பல விருதுகளை வென்ற செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் "எங்கே போனார் எலியார்?, "எங்கே? எங்கே? குடை எங்கே? ஆகிய சிறுவர் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன. (ச-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 06 . 1936



மறைவு
04 . 08 . 2025

### வினாயகர் மகாலிங்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வினாயகர் மகாலிங்கம் அவர்கள் நேற்று (04.08.2025) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வினாயகர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி குழந்தைவடிவேல் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், காசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், யோகராணி, மதியழகன், மதிவதனன், மதிவாணன், மங்களராணி, தனலக்ஸ்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற யோகராசா மற்றும் தனலட்சுமி, உமா காலஞ்சென்ற விக்ரோறியா, வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், டினோசினி, பிரவின், பிரவிஸ்னா, ஹரிஸ், தினேஸ், பிரதீஸ், பிரசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வரலட்சுமி விரதம் விஷேட வழிபாடு

வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு அம்மன் ஆலயங்களில் விஷேட வழிபாடுகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.
இதன்போது சிறப்புப் பூஜை, அபிஷேகம், காப்புக் கட்டுதல் என்பன இடம்பெறும். தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் அன்றையதினம் பி.ப. 3 மணிக்கு வரலட்சுமி விரத வழிபாடு ஆரம்பமாகி இடம்பெறும். (ச-25, 17)

## Angel International School

MANIPAY JAFFNA CHAVAKACHCHERI

**Admissions Available for Classes from 3+ to A/L for the Academic Year 2025/2026**

Syllabuses: 3+ to Grade 08 → Cambridge syllabus,
Grade 09 to A/L → Cambridge / Sri Lankan syllabuses are followed.

| School Location | Available Grades | Contact Numbers |
|---|---|---|
| Manipay | 3+ to A/L | 021 225 5628<br>077 306 8997<br>077 627 9298 |
| Jaffna | 3+ to Grade 6 | |
| Chavakachcheri | 3+ to Grade 6 | |

Admission forms can be obtained at AIS, Mather's Lane, Manipay from 9.00 am to 1.00 pm during working/school days. (school will be closed from Aug 18th to Aug 29th)

*Contact us for more information.*

*- School Administration*

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

மானிப்பாய் யாழ்ப்பாணம் சாவகச்சேரி

**3+ தொடக்கம் உயர்தரம் வரையான 2025/26 கல்வியாண்டுக்குரிய அனுமதிகள்**

பாடத்திட்டங்கள்:
- வயது 3+ முதல் தரம் 08 வரை → கேம்பிரிட்ஜ் பாடத்திட்டமும்,
- தரம் 09 முதல் A/L வரை → கேம்பிரிட்ஜ் / இலங்கை பாடத்திட்டங்களும் பின்பற்றப்படுகின்றன.

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| மானிப்பாய் | 3+ to A/L | 021 225 5628<br>077 306 8997<br>077 627 9298 |
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 6 | |
| சாவகச்சேரி | 3+ to Grade 6 | |

- விண்ணப்பப் படிவங்களை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை பாடசாலை/வேலை நாட்களில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஆகஸ்ட் 18 தொடக்கம் 29ம் திகதிவரை பாடசாலை மூடியிருக்கும்)


மேலதிக விபரங்களிற்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.

- பாடசாலை நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பலவீனமாக இருப்பதாலேயே, பலமாக இருப்பதாக பாசாங்கு செய்கிறோம்.

\- பௌலோ கொய்லோ


இராஜேந்திரம்


சிக்ருன் இராஜேந்திரம்



# சீ–நோரின் தோற்றத்துக்கு காரணம் யாழ்ப்பாணத் தமிழனே!

இலங்கையெங்கும் பரவலாக அறியப்பட்ட சீ–நோர் நிறுவனத்தின் தோற்றமும், அதற்கான முற்றுமுழுதான அத்திபாரமும் ஒரு யாழ்ப்பாணத் தமிழருடைய சிந்தனையின் வெளிப்பாடு என்றால் நம்பமுடிகின்றதா? ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும்.

'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற பெயரில் இராஜேந்திரம் என்னும் யாழ்ப்பாணத் தமிழரால், 1967ஆம் ஆண்டில் காரைநகர் தோப்புக்காட்டில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்தான் காலப்போக்கில் 'சீ–நோர்' என்பதாக மாறியது. 'மாலு மீன் என்டர்பிரைஸ்' எவ்வாறு தோற்றம் பெற்றது? அதன் நோக்கங்கள் எவ்வாறு இருந்தன? பின்னர் அது எதற்காக சீ–நோர் என்பதாக மாறியது என இராஜேந்திரத்தின் மனைவி சிக்ருன் இராஜேந்திரம் வழங்கிய நேர்காணல் இது.

நேர்காணல் – ஜெ.சுலக்சன்

**கே: உங்கள் கணவர் தொடர்பிலும், அவர் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற திட்டத்தை கொண்டுவந்ததன் பின்னணி தொடர்பிலும் கூறுங்கள்?**

ப: என் கணவர் 1932ஆம் ஆண்டில் குருநகரில் பிறந்தார். அப்போது குருநகரில் பெரும்பாலானோர் மீனவர்களாக இருந்தனர். அண்ணளவாக 90 வீதமானவர்களை மீனவர்களாகக் கொண்ட கிராமம் அது. ஆனால் என் கணவரின் குடும்பம் மீன்பிடித் தொழிலில் இல்லை. அவரது தந்தை மற்றும் பாட்டன் கட்டட ஒப்பந்ததாரர்களாக இருந்தனர். அவர்கள் தேவாலயங்களைக் கட்டினார்கள், கொழும்பில்கூட பணிகள் இருந்தன. என் கணவரின் பாட்டன் ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் உள்ள புகழ்பெற்ற செயிண்ட் ஜேம்ஸ் தேவாலயத்தின் ஒப்பந்ததாரராகவும் இருந்தார். அந்த ஆலயம் தற்போதும் அங்குள்ளது. எனினும், எனது கணவர் நிதியை ஈட்டுவதற்காக ஓடிக்கொண்டிருக்கவில்லை. 'மீனவர்கள் ஏன் ஏழைகளாக உள்ளனர்?', 'அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு என்னசெய்யலாம்?' என்ற கேள்விகள் அவரைத் துளைத்தன. அவருக்கு மீனவச் சிறுவர்களிடம் நிறைய நட்புகள் இருந்தன, எனவே அவர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்திருந்தார். வளர்ந்துவரும்போது, ஏழைகளுக்கு உதவ ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவுசெய்தார். இவ்வாறு அவருடைய மனதில் ஏழைகளுக்காக ஏற்பட்ட அதிர்வுகள்தான் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற திட்டத்தை ஆரம்பிக்கக் காரணமாக அமைந்தன.

**கே: 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற திட்டத்தை ஆரம்பிப்பதற்கான துறைசார் அதிர்வு, தொடர்புகள் என்பன அவருக்கு எவ்வாறு கிடைத்தன?**

ப: மீனவச் சமூகத்துக்கு உதவுவதற்காகவும், அதற்கான துறைசார் அறிவைப் பெறுவதற்காகவும் அவர் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கத் தீர்மானித்தார். மற்ற நாடுகளில் மீன்பிடித் தொழில் மற்றும் மீனவர்களின் வாழ்க்கை எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்பினார். அவர் நல்ல கல்வி பெற்றிருந்ததால், வெளிநாடுகளில் நிலைமை வேறுபட்டது என்பது அவருக்குத் தெரியும். 'ஐரோப்பாவில் அவர்கள் மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தமுடிந்தால், ஏன் இலங்கையில் முடியாது?' என்று எண்ணினார். எனவே அவர் இங்கிலாந்து செல்ல முடிவுசெய்தார்.

தனது நண்பர் ஒருவருடன் யாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார்சைக்கிளில் தன் பயணத்தை ஆரம்பித்தார். பாகிஸ்தானில் அந்த மோட்டார்சைக்கிள் பழுதடைந்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் பஸ் மற்றும் லொறிகள் மூலம் பயணித்தனர். வழியில் லெபனானில் ஒரு முகாமை நடத்திய சிலரைச் சந்தித்தார். அவர்கள் உள்ளூர் கிராமவாசிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். அவர்களுடன் சில காலம் தங்கிய பிறகு, இறுதியில் லண்டனை அடைந்தார்.

லண்டனில், அவர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நண்பர்களைச் சந்தித்தார். அங்கு ஏற்பட்ட தொடர்புகள்மூலம், அவர் விரும்பிய கல்வியைப் பெறுவதற்கு நோர்வேயே சிறந்தது என்று தோன்றியது. சரியான பாடத்திட்டங்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் நோர்வே சென்றார். நோர்வேயில் கிடைத்த கல்வியறிவும், தொடர்புகளும்தான் எனது கணவருக்குள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின..

## இலங்கை அதிகாரிகளால் தொடர்ச்சியாக ஏமாற்றம்

**கே: நோர்வேயில் பெற்றுக்கொண்ட மீன்பிடித்துறை தொடர்பான துறைசார் அறிவை உங்களின் கணவர் எவ்வாறு பயன்படுத்தினார்? அந்த நுட்பங்களை இலங்கைக்குள் எவ்வாறு ஊடுகடத்தினார்?**

ப: அவர் நோர்வேயில் முதற்கட்டமாக இரண்டரை ஆண்டுகள் கல்விகற்றுவிட்டு இலங்கைக்குத் திரும்பினார். மீன்பிடி அமைச்சகத்தை அணுகினார், ஆனால் வடக்கில் முதலிடுவதற்கும், அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் அரச அதிகாரிகளிடம் எந்த ஆர்வமும் இருக்கவில்லை. உண்மையில் அரசியற் காரணங்களாலேயே அவர்கள் முன்வரவில்லை. எனவே அவர் மீண்டும் நோர்வேக்குச் சென்று கல்வியைத் தொடர்ந்தார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பினார். அப்போதும் இலங்கை அதிகாரிகளிடம் எந்த ஆர்வமும் இருக்கவில்லை. எல்லா அரசு சாரா அமைப்புகளையும் அணுகினார், ஆனால் அவர்களுக்கு வேறு திட்டங்கள் இருந்தன. இதனால் எனது கணவர் மிகவும் ஏமாற்றமடைந்தார்.

**கே: உங்கள் கணவர் இராஜேந்திரத்தின் திட்டங்களுக்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லையா?**

ப: இல்லை. நீண்ட முயற்சிக்குப் பின்னர், அவரது நோர்வே நண்பர்களில் ஒருவர் கேரளாவில் நோர்வேயின் நிதி உதவியுடன் ஒரு மீன்பிடித்திட்டம் நடைபெறுவதாகக் கூறிய தகவலின் அடிப்படையில் அந்த நிறுவனத்தை அணுகினார். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் முதலிடுவதற்கு ஆர்வம் இருக்கலாம் என்று எதிர்பார்த்தார். இனியும் அமைச்சகத்தைச் சார்ந்து இருக்கவேண்டியதில்லை என்ற நம்பிக்கையுடன், முதலீட்டாளர்களைத் தேடி நோர்வேக்குச் சென்றார். ஒருவாறாக, நோர்வேயில் ஓர் அரசு சாரா அமைப்பைக் கண்டுபிடித்தார். ஒரு திட்ட முன்மொழிவைத் தயாரித்து ஒப்படைத்து நிதியுதவி கோரினார். பணம் அனுமதிக்கப்பட்டது. தனது திட்டத்துக்குப் பொருத்தமான இடமாக, காரைநகரில் உள்ள தோப்புக்காட்டுக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். 1967ஆம் ஆண்டில் சில நண்பர்கள் மற்றும் நோர்வே நிபுணர்களுடன் கூடி, காரைநகரில் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற மீன்பிடித் திட்டத்தைத் தொடங்கினார்.

## சிங்கள மீனவ மக்களுடைய நன்மைக்காகவும் உருவானது

**கே: எதற்காக 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்?**

ப: சிங்கள மொழியை மையப்படுத்திய அரசியலை எனது கணவர் எதிர்த்தார். ஆனால், அவர் சிங்கள மொழியை

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ-நோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



எதிர்க்கவுமில்லை, வெறுக்கவுமில்லை. இன்னும் சொல்லப்போனால், தெற்கேயும் ஏழை மீனவர்கள் இருப்பதை அவர் உணர்ந்தார். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு அனைத்துக் கடல் கிராமங்களுக்கும் ஒரு மாதிரியாக இருக்கும் வகையில் இத்திட்டத்தை உருவாக்க விரும்பினார். இதை 'சீ-நோர்' என்று அனைவரும் நினைக்கிறார்கள், ஆனால் ஆரம்பத்தில் அது 'மாலு மீன் என்டர்பிரைஸ்' என்று அழைக்கப்பட்டது. சுமார் மூன்று ஆண்டுகள் இந்தத் திட்டம் நடந்தது. நானும் என் இரு மகள்களுடன் அங்கு வந்தோம். பலர் அவருடன் பணியாற்ற வந்தனர். ஆரம்பத்தில் பெரும் வரவேற்புடன்தான் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' இயங்கிக் கொண்டிருந்தது. மக்களின் அமோக ஆதரவை அது பெற்றது.

**கே: 'மாலு மீன் என்டர்பிரைஸ்' எதற்காக 'சீ-நோர்' என மாறியது?**

**ப:** எனது கணவரின் சிந்தனையும் செயற்றிட்டமும் உள்ளூர் மீனவர்களுக்கு மலிவான படகுகள் கட்டித்தருவதும், கிராம மேம்பாட்டுக்கு ஊராட்சி முயற்சிகளை ஏற்பாடு செய்வதும், ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்குவதும்தான். ஆனால் கொழும்பில் உள்ள வணிகர்களின் செல்வாக்கால், நோர்வேயின் அரசு சாரா நிறுவனம் தன் நோக்கத்தை மாற்றியது.

அவர்கள் ஜப்பானுக்குக் கடல் உணவு ஏற்றுமதி செய்வதற்கும், விற்பனைக்குப் படகுகள் தயாரிப்பதற்கும் ஒரு வணிக நிறுவனமாக மாற்ற முடிவுசெய்தனர். இது என் கணவரின் யோசனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பணம் அவர்களிடம் இருந்ததால், முடிவுகளை அவர்களே எடுத்தனர். என் கணவரும் அவரது குழுவும் இந்தப் பணத்தைச் சார்ந்தே இருந்தனர். இல்லையென்றால், தோப்புக்காட்டில் பணிபுரியும் 35 பேருக்கு சம்பளம் எப்படிக் கொடுப்பது? கணவர் நோர்வே நிறுவனத்தினுடைய முடிவுகளை மாற்றமுடியாமல் போனார். அவர் தொடர்ந்து போராடினால், திட்டம் மூடப்படும் அபாயமும் இருந்தது. அப்படியானால் 35 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே அவர் அமைதியாக விலகி, திட்டத்தை நோர்வே நிறுவனத்தின் கண்காணிப்பிலும், கொழும்பு வணிகர்களிடம் விட்டுவிட்டார். இதன் பின்னர் இத்திட்டம் 'சீ-நோர் டெவலப்மென்ட் பவுண்டேஷன்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அப்போதுதான் 'சீ-நோர்' என்ற பெயர் வந்தது. இவ்வாறுதான் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' 'சீ-நோர்' என மாறியது.

### தமிழர் இல்லையென்றால் சீ-நோர் வந்திருக்காது

நான் இங்கே சொல்வது என்னவென்றால், ஒரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் இல்லையென்றால், இந்த நாட்டில் 'சீ-நோர்' இருக்காது. சீ-நோர் பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது. இன்றும் பலர் சீ-நோர் நிறுவனங்களில் பணிபுரிகிறார்கள். இவை அனைத்தும் என் கணவரின் 'மாலு மீன் என்டர்பிரைஸ்' இல்லாமல் நடந்திருக்காது.

வடக்கு மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணத்தினர் இந்த நாட்டுக்கு ஒரு புதிய முன்மாதிரியைக் கொண்டுவந்ததில் பெருமைகொள்ளவேண்டும் என்பதுதான். என் கணவர் இதற்கான காரணகர்த்தா என்பதற்காகக் கூறவில்லை. இங்கிருந்து ஒரு மனிதர் இதைச் செய்தார் என்பதால் யாழ்ப்பாண மக்கள் இதில் பெருமை கொள்ளலாம். இந்தப் பெருமையைப் பயன்படுத்தி, இளம் தலைமுறையினரை தங்கள் சமூகத்துக்கு நல்லது செய்ய ஊக்குவிக்கலாம். இதுதான் எனது கருத்து.

இப்போது காரைநகரில் உள்ள அந்த இடம் காலியாகக் கிடக்கிறது. போரின்போது அது முழுவதுமாக குண்டுத்தாக்குதலால் அழிக்கப்பட்டது. பின்னர், சில ஆண்டுகளுக்குப் பிறகு, புதிய கட்டடங்களாக மீண்டும் கட்டப்பட்டது. ஆனால் அவை காலியாக உள்ளன. அங்கு எதுவும் நடக்கவில்லை. இது பணத்தின் விரயம், வாய்ப்புகளின் விரயம்.

**கே: இந்தத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்தவேண்டும் என்ற பெருவிருப்பு உங்களிடம் உள்ளதா?**

**ப:** ஆம்! நிச்சயமாக! மீன்பிடி அமைச்சோ அல்லது முதலீட்டாளர்களோ யார் வேண்டுமானாலும் இதைக் கவனிக்கவேண்டும். நான் மீன்பிடி அமைச்சரோடும் பேசியிருக்கிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு அவருடன் இரண்டு மணி நேரம் சந்தித்தேன். அவர் மிகவும் நேர்மறையாக உள்ளார். அவர் ஒரு தமிழர். இங்கு நல்ல மாற்றங்கள் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார். அவர் வெளிநாட்டில் உள்ள தமிழர்களை ஈடுபாட்டுடன் செயல்படுத்த விரும்புகிறார். நான் அவரிடம் சொன்னேன், 'நீங்கள் உங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றினால்—கம்யூனிசம், தேசியவாதம் (சிங்களமோ தமிழோ) போன்றவற்றை மறந்து, இலங்கைத் தேசியத்தை மையமாக வைத்து, மக்கள் ஒன்றாக வேலை செய்தால்—இளம் தலைமுறையினருக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். போர், தமிழீழம் பற்றி மறந்து, இலங்கை மற்றும் தங்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பார்கள்' என்றேன். அரசாங்கம் தனது பங்கைச் செய்தால், நான் எனது முழு முயற்சியையும் வழங்குவேன். நான் ஒரு வயதானவள், ஆனால் மக்களுடன் பேசி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, பயனுள்ளதாக ஏதாவது செய்யத் தூண்டமுடியும். காரைநகரில் உள்ள அந்த இடத்தைப் பயன்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். இதுதான் என் ஆசை. இது எனது ஆசை என்பதைவிட, வடக்கிலுள்ள மீன்பிடிச் சமூகத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் முயற்சி. எனவே, இதன் கனதியை அரசாங்கம் உணரவேண்டும்.

# ஜூலைக் கலவரம்

## இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி




ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

### தமிழர்களைக் காப்பாற்றிய சிங்கள - முஸ்லிம் மக்கள்

தொடர்ச்சியாக 7 நாள்கள் கலவரம். நடத்தியவர்கள் சில சிங்கள இனவாதிகள். அன்றைய அரசின் கைக்கூலிகள்.

பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு இதில் உடன்பாடு இல்லை. இப்படியான கொடூரத்தை அவர்கள் விரும்பவில்லை. முடிந்தவரை தமிழர்களுக்கு உதவினார்கள். சிங்கள வீடுகள் பலவற்றில் அதிகமான தமிழர்கள் அன்று. அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் வீட்டு உரிமையாளர்களே.! அந்தச் சிங்களவர்களே.!

தமிழர்களை அனுப்பிவிடுமாறு காடையர்கள் அந்தச் சிங்களவர்களுக்கு மிரட்டல். புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பதாகக் குற்றச்சாட்டு. இருந்தும், பாதுகாத்தனர். ஓரிரு நாள்கள். மூன்று நேர உணவும் சிங்களவர்களிடம் இருந்தே! வீட்டு உரிமையாளர்களிடம் இருந்தே! பல தமிழர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசென்றவர்களும் சிங்களவர்களே.!

கொள்ளுப்பிட்டியில் ஒரு சம்பவம். கடைகளை எரித்து நாசம் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் காடையர்கள். பிரபல்யமான தோசைக்கடை அது. இன்றும்தான். உடைக்கிறார்கள் அதை. உள்ளே ஒரு முதியவர். எல்லோரும் தப்பியோட அவர் மட்டும் அதற்குள். அவரால் முடியவில்லை. முதுமை காரணமாக ஓடமுடியவில்லை. சிக்குகிறார் காடையர்களிடம்.

பிறகென்ன அடிதான். சுற்றி நின்று அடி. முதியவர் என்றுகூடப் பார்க்கவில்லை. கடும் அடி. வழிந்தோடுகிறது இரத்தம். மன்றாடுகிறார். உயிர்ப் பிச்சை கேட்டு. விடுவதாக இல்லை அவர்கள். கொல்வதற்குத் தயார்.

வேடிக்கை பார்க்கிறது ஒரு கூட்டம். பெரும் கூட்டம். சிங்கள மக்களே அவர்கள். அதற்குள் பல பெண்கள். சிங்கப் பெண்கள்தான். மனிதாபிமானமிக்க பெண்கள். பாய்ந்து செல்கிறார்கள் முன்னே. காடையர்களின் முன்னே. கடும் வாக்குவாதம் அவர்களுடன். ஒன்றும் செய்ய முடியவில்லை அந்தக் காடையர்களால். இறுதியில் தோல்வி. விட்டுச் செல்கிறார்கள் முதியவரை. உயிர் பிழைக்கிறார் அந்தப் பெரியவர். அந்தப் பெண்களின் துணிச்சலால் மனிதாபிமானத்தால்.

பம்பலப்பிட்டியில் மற்றுமொரு சம்பவம். அங்கு அகதிகளாக அதிகமான தமிழ்ப் பெண்கள். அங்கு ஒரு பௌத்த பிக்கு. அவர்களுக்குப் பாதுக்காப்பாக. அங்கு வருகிறார்கள் காடையர்கள் இன்னொரு பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில்.

அவர்களைத் தடுக்கிறார் அந்தப் பிக்கு. அந்தப் பெண்களைப் பாதுகாத்துக்கொண்டு இருக்கும் பிக்கு 'என்னைக் கொன்றுவிட்டு இவர்களைக் கொல்லுங்கள்' துணிச்சலுடன் எதிரே போய் நிற்கிறார்.

அந்தப் பெண்களின் உயிர்களைப் பாதுகாக்க தன்னுயிரையும் கொடுக்கத் துணிகிறார். இங்கும் கடும் வாக்குவாதம். இரண்டு பிக்குகளின் இடையே. ஒரு பிக்கு இனவாதியாக. ஒரு பிக்கு மனிதாபிமானியாக. இறுதியில் வென்றது மனிதாபிமானமே. பின்வாங்கிச் செல்கிறார்கள் அந்தக் காடையர்கள். ஒரு பௌத்த பிக்குவால் பாதுகாக்கப்படுகின்றன அந்தப் பெண்களின் உயிர், அவர்களின் கற்பு.

கொழும்புத் துறைமுகத்தில் இன்னொரு சம்பவம்.

வடக்கு- கிழக்குக்கு அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்படுகிறார்கள் தமிழர்கள். அவர்கள் எல்லோரும் இப்போது கொழும்புத் துறைமுகத்தில். உணவில்லை. கடும் பசி. உணவு தேடுகிறார்கள் அங்கு.

அங்கு உணவு விற்பதுண்டு. அங்கே சில இளைஞர்கள். சிங்கள இளைஞர்கள். அவர்களிடம் கேட்கிறார்கள் உணவு.உடனே கொடுக்கிறார்கள். பணம் கொடுக்க வாங்கவில்லை.

ஏன்...???

அது அவர்கள் உண்ண வைத்திருந்த உணவு. தமிழர்க்கு ஏற்பட்ட நிலை கண்டு மனம் வருந்துகிறார்கள்.

'இது அரசியல் சதி. எங்களுக்கு இதில் உடன்பாடில்லை. நீங்கள் எல்லோரும் திரும்பி வர வேண்டும். மீண்டும் நாம் ஒற்றுமையாக வாழவேண்டும்' இவ்வாறு கூறுகிறார்கள் அவர்கள். பெரும் ஆறுதல் தமிழர்களுக்கு.

இப்படி எத்தனையோ சம்பவங்கள். சிங்களவர்கள் மட்டுமல்ல முஸ்லிம்களும்தான் உதவினார்கள். அடைக்கலம் கொடுத்தார்கள். காப்பாற்றினார்கள்.

அதையும் தாண்டித்தான் ஏனையவர்கள் கொல்லப்பட்டார்கள். 400 பேர் பலி என்கிறது உத்தியோகபூர்வ அறிக்கை. இல்லை, மூவாயிரம் என்கிறது சுயாதீன அறிக்கை. மேலும், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கடைகள் எரிப்பு. கோடிக்கணக்கான சொத்துகள் சூறை. ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வடக்கு - கிழக்குக்கு இடம்பெயர்வு.

அடுத்து என்ன..? பார்ப்போம் அடுத்த தொடரில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண வழியாக மாறும் வீதிகள்



■ மருத்துவர் பா.சயந்தன்

*குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்*
*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*மருத்துவபீடம் யாழ்ப்பாணம்*

நம்முடைய செய்தித்தாள்களில் அடிக்கடி இடம் பெறும் மிகக் கவலைக்கிடமான தலைப்புகளாக "வீதிவிபத்தால் உயிரிழப்பு" என்பதனைக் காண முடிகிறது. இன்று, அனேகமான சாலை விபத்துகளுக்கு முக்கியமான காரணமாக இருப்பது மது, போதைப்பொருள் பாவனை என்பதை ஆய்வுகள் உறுதி செய்கின்றன. போதைப்பொருள்களைப் பயன்படுத்தி வாகனங்களைச் செலுத்தும்போது பல அப்பாவி உயிர்கள் பலியாவதுடன் சில குடும்பங்களின் எதிர்காலமானது ஓர் இரு வினாடிகளில் பறிக்கப்படுகின்றது. இந்த மரணங்கள் தவிர்க்கப்படக்கூடியவை என்பதை நாம் உணர வேண்டும்.

### எச்சரிக்கும் தரவுகள்

தேசிய சாலைப் பாதுகாப்புச்சபைத் தரவுகளின்படி மது பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையின் பின்னர் வாகனங்களை ஓட்டுவதன்மூலம் 30 - 35 வீதமான வீதிவிபத்துகள் ஏற்படுகின்றன. இலங்கையின் தரவுகளின்படி இன்றைய இளைய சமுதாயத்தினரிடம் கஞ்சா மற்றும் ஐஸ் போன்ற போதைப்பொருள்களைப் பயன்படுத்திய பின்னர் வாகனம் ஓட்டுதல் தொடர்பான குற்றங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அறிக்கையின்படி திருவிழாக் காலங்களில் போதைப்பொருள் பயன்படுத்திய பின் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

### எமது மூளையைப் பாதிக்கும் போதை

மதுவானது மூளையின் செயற்பாட்டைத் தாமதப்படுத்துகின்றது. மைய நரம்புத்தொகுதியின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இதன்மூலம் மைய நரம்புத்தொகுதியின் செயற்பாட்டு நேரத்தை அதிகரிப்பதுடன் முடிவெடுக்கும் ஆற்றலைக் குறைக்கின்றது.

மனித மூளையின் ஒருபகுதியான சிறுமூளையானது மனிதனது சமநிலையைப் பேணுகின்றது. இதனைப் பாதிப்பதன் மூலம் சக்கரத்தைக் கட்டுப்படுத்தும் மற்றும் தடுப்பினைப் பிரயோகிக்கும் திறன் குறைவடைகின்றது. தவறான தன்னம்பிக்கையை ஏற்படுத்துகிறது. மூளையின் முற்பகுதியானது மனிதர்கள் ஒரு விடயத்தைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கினை ஆற்றுகின்றது. மதுபாவனை இதனைப் பாதிப்பதன்மூலம் வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாதுபோவதனால் வீதி விபத்துகள் ஏற்பட வழிவகுக்கின்றது. கஞ்சாவில் உள்ள THC (Tetra Hydro Cannabinol) என்னும் பொருள் கண்ணுக்குத் தோன்றும் தூரத்தை தவறாகக் காட்டுகிறது. தூக்கநிலை மற்றும் தன்னிலையிழத்தல், வாகனம் வருவதைப் பார்த்தாலும், மூளை தகவலை தாமதமாக செயற்படுத்துவதால் தடுப்பினை பிரயோகிக்கமுடியாமல் போகிறது. உணர்திறனைப் பாதிக்கின்றது.

மெத்தாம்பெட்டமைன்: ஆரம்பத்தில் அவர்களது செயற்பாட்டினை அதிகரித்தாலும், விரைவில் கோபம், குழப்ப நிலை போன்ற மாயத்தோற்றங்களை ஏற்படுத்தி வீதி விபத்துக்கு வழிவகுக்கும். ஹெராய்ன்: மிகுந்த தூக்க நிலை மற்றும் மயக்கத்தை ஏற்படுத்தி, வாகனத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் செய்கிறது.

### ஏன் விபத்து உடனே நடக்கிறது?

வாகனம் ஓட்டும்போது கண்கள் - மூளை - தசைகள் ஒரே நேரத்தில் செயற்படவேண்டும். மதுவும் போதைப் பொருட்களும் இந்த நரம்புத் தகவல் பரிமாற்ற வேகத்தைக் குறைத்துவிடுகின்றன. 60 கி.மீற்றர் மணி வேகத்தில் செல்லும் வாகனம் ஒரு விநாடியில் 17 மீற்றர் நகரும். எனவே சிறிய தாமதம்கூட உயிரைப் பறிக்கும்.

### இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்

பண்டிகைக் காலங்களில் மது அருந்துதல், திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் மத நிகழ்வுகளில் பெரும்பாலும் அதிக அளவில் மது அருந்தும் வழக்கம் காணப்படுகிறது. அதைத் தொடர்ந்து இரவு நேரங்களில் நீண்டதூரப் பயணம் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இலங்கையில் மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களின் பாவனை அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த வாகனங்களில் பயணிப்பவர்கள் இலகுவாக பாதிக்கப்படக்கூடியவர்கள். சிறிய விபத்துகளில்கூட தலை மற்றும் கைகால்களில் கடுமையான காயங்கள் ஏற்பட வழிவகுக்கும்.

### போக்குவரத்து காவல்துறைப் பரிசோதனைகளில் உள்ள இடர்பாடுகள்:

சுவாசப் பரிசோதனைக் கருவி மூலம் சோதனைகள் குறைவாகவே செய்யப்படுகின்றன, மேலும் முக்கியமான நகரங்களுக்கு வெளியே ஓட்டுநர்களுக்கு போதைப் பொருள் பரிசோதனை செய்வதில் பல்வேறு தடைகள் உள்ளன.

### தடுக்கும் வழிகள்

பண்டிகை நாள்கள், இரவு நேரங்களில் அதிக சோதனைகள், தொடர்ச்சியான சோதனைகளினை போக்குவரத்து காவல்துறை மேற்கொள்ளல். அதிகளவான குற்றப் பணம், தண்டனைகள் வழங்குதல். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஓட்டுநர் பள்ளிகளில் வாகனம் ஓட்டுவதில் ஏற்படும் குறைபாடுகளால் ஏற்படும் ஆபத்துகள் குறித்த பாடங்களை ஒருங்கிணைக்கவேண்டும். குடிபோதையில் வாகனம் ஓட்டுவதை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் தீவிரமாகத் தடுக்கவேண்டும். மீண்டும் மீண்டும் குற்றவாளிகளுக்குக் கட்டாய ஆலோசனை மற்றும் மறுவாழ்வு வழங்குதல்.

### நம் பொறுப்பு

ஒவ்வொரு வீதிவிபத்து மரணங்களும் தவிர்க்கப்பட வேண்டியவையாகும். இலங்கையர்களாகிய நாம் சாலைகளைப் போர்க்களங்களாக அல்லாது, பகிரப்பட்ட இடங்களாகக் கருதவேண்டும். குடிபோதையில் அல்லது போதைப்பொருள் பயன்படுத்திய பிறகு வாகனம் ஓட்டாமல் இருப்பது கடமை மட்டுமல்ல, அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதற்கான தார்மீகப் பொறுப்பாகும். அடுத்த முறை வாகனம் ஓட்டுவதற்கு முன்பு மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவிப்பதைத் தவிர்க்கவும். மகிழ்ச்சியான நாளைத் துக்கமாக மாற்ற ஒரு நொடி வீதி விபத்தே போதுமானது. சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

# விழி திறந்த புதைகுழிகள்



மண்ணுக்குள் உறங்கிக் கிடந்த
மௌனக்கதை ஓர் புதைபடிவம்,
செம்மணியின் தேடலில் இன்று
சொல்லுகின்றது தன் சுமைதான்!


தென்றல்கூட தாண்டாத அந்தச் சுரங்கம்,
தேவதையாய் தோன்றி நின்றது மனித எச்சம்,
மூடிவைத்த காலத்தின் கதவை
திறக்கின்றது அகழ்வறிவின் வெளிச்சம்.

அடிவெளியில் புதைந்த நினைவுகள்
அமாவாசையின் கனவில் விழுந்த கண்கள்,
ஓர் எச்சம் மட்டும் அல்ல அது,
ஓர் யுகத்தின் இருண்ட உணர்வுச் சுவடு!

மண்ணைத் தழுவிய அந்த எலும்புகள்,
மௌனக் குரலாய் பேசுகின்றன;

செம்மணியின் அகழும் கரங்களால்
மீள்கின்றன மறந்த வரலாறுகள்,
ஒரு புதைகுழி மட்டும் அல்ல அது
ஒரு யுகத்தின் யாதும் தெரியாத பாடல்!

-வரிகளின் காதலன்



புதன்பொய்கைக்கு
நீங்களும்
எழுதலாம்



- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை



பகுதி: II



கலாநிதி சுஜீதா ஜெகஜீவன்

### பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்துமா இலங்கை?

முதன்மை உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தற்சார்பு என்பவற்றினூடாக தேசிய இறைமையை மீட்டெடுப்பதே தமது இறுதி நோக்கமென வலியுறுத்தினார். தற்பொழுது அடையப்பட்டுள்ள மேல்வாரியான பொருளாதார உறுதிப்பாடு மாத்திரம் போதாதெனவும் பொருளாதார முறைமையை மாற்றியமைப்பதற்கும் பொருளாதார நன்மைகள் அனைவரையும் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கும் இன்னமும் புதிய சீர்திருத்தங்களும் நிலைமாற்றல்களும் மேற்கொள்ளப்படுவது அவசியமென அவர் வலியுறுத்தினார். இந்த முயற்சியில் செலவு வினைத்திறன்வாய்ந்த அடிப்படையில் அரச சேவைகளை வழங்கவேண்டிய தேவைகளையும் செலவினைச் சிக்கனப்படுவதற்காக சில அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான அல்லது முடிவுறுத்தவதற்கான தேவை பற்றியும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், ஒரேமாதிரியான சேவைகளை வழங்குகின்ற அரச நிறுவனங்களைக் கூட்டிணைப்பதற்கும் அவற்றின் இலக்குகளை மீள வரைவிலக்கணப்படுத்த வேண்டியமைக்குமான தேவைகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். அடுத்ததாக, இலஞ்சம் மற்றும் ஊழலினை ஒழிக்கவேண்டிய தேவை பற்றிய ஆழமான கருத்துகளை அவர் வெளியிட்டிருந்தார். இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது வெறுமனே கொடுக்கல்வாங்கல்களாக மாத்திரமில்லாமல் இன்றியமையாத செயற்றிட்டங்கள் நிராகரிக்கப்படுவதையும் தேவையற்ற செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதையும் குறித்து நிற்குமென அவர் குறிப்பிட்டார்.


முக்கியமாக சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் மீட்சிக்காக இலக்கிடப்பட்ட சலுகைகளை வழங்குவதிலும் கிராமிய சமூகங்களை பிரதான பொருளாதாரத்துடன் ஒருங்கிணைத்துக்கொள்வதிலும் அரசாங்கத்தின் ஈடுபாட்டினை வலியுறுத்தியதுடன், அதற்காக சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்பினையும் நாடினார். நாணயநிதியத்தின் தற்போதைய நிதிய வசதியானது இலங்கைக்கான கடைசி நிகழ்ச்சித்திட்டமாக இருக்கவேண்டுமென்பதே தமது இலக்காகுமென்றும் இதனை அடைந்துகொள்வதற்கும் தேசிய இறையாண்மையினையும் தற்சார்பினையும் மீட்டெடுப்பதும் 2028ஆம் ஆண்டளவில் எமது கடனை சுயாதீனமாக மீளச்செலுத்துவதற்கான உறுதியான பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதும் இறுதிக்குறிக்கோளாகுமென ஜனாதிபதி வலியுறுத்தினார். இதற்கு அரசியல் தலைமைத்துவத்தின் கடப்பாட்டினையும் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பினையும் பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் வேண்டிநிற்பதாக இறுதியாக எடுத்தியம்பினார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இந்த அனுபவங்களிலிருந்து கிடைக்கப்பெறும் முக்கியமான பாடமென்பது இவ்வாறான பொருளாதார சிக்கல்களுக்கும் கடன் மறுசீரமைப்பிற்கு உட்படாத வரையில் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதுவும் முகாமைசெய்வதுமாகும். பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள்வதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையிலும் சுமையாக இருந்திருக்கின்றன. உதாரணமாக, வரிகள் அதிகரிக்கப்பட்டமை, மானியங்கள் நிறுத்தப்பட்டமை மற்றும் செலவினை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் போன்றவை பொதுமக்களைப் பெருமளவில் பாதித்திருந்தன. இருந்தபோதிலும், அவை நிலையான எதிர்காலத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் அடிப்படையாகவுள்ள சீர்திருத்தங்களாகும். நீண்டகால பொருளாதார சுபீட்சத்தினைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையின் குறுங்கால அர்ப்பணிப்புகள் தவிர்க்க முடியாதவை. இலங்கையின் வறுமை வீதம் பொருளாதார நெருக்கடியின் பின்னர் வேகமாக அதிகரித்திருக்கின்றது. வறுமையைக் குறைப்பதற்கு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மேலதிகச் சீர்திருத்தங்கள் அவசியம். ஊழலினை ஒழிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள செயற்பாடுகள் விரைவாக நடைமுறைப்படுத்தப்படவேண்டியிருப்பதுடன் எதிர்காலத்தில் பொதுக்கடன் மீண்டும் நிலைபேறற்ற தன்மைக்குத் திரும்பாமல் இருப்பதற்கு தற்பொழுது முன்னெடுக்கப்படும் அரச இறைச் சீராக்கங்கள் தொடரப்பட வேண்டும். உலகளாவிய சூழல் முன்னெப்பொழுதுமில்லாதவாறு பாதகமானதும் நிச்சயமற்றதாகவும் மாறியுள்ளது. இந்தச் சூழலில் சீர்திருத்தங்களைத் தொடர்வது மேலும் சிரமமாகவிருக்கும். இருப்பினும், தேவைக்கு முன்கூட்டியே சீர்திருத்த நிகழ்ச்சி நிரலிலிருந்து விலகுவது எந்தவகையிலும் இதற்குத் தீர்வாக அமையாது. கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பல தடவைகள் விலகியிருந்தமையும் அதன் பின்விளைவுகளும் இலங்கைக்கு நன்கு பரீட்சயமானவை. எனவே, அனைவரையும் உள்ளடக்கியவகையில் பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடர்வதும், இதற்காக அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதும் இம்முறை இந்த நிதிய வசதி வேறுபட்டதாக இருப்பதனையும் இலங்கைக்கான இறுதி நிகழ்ச்சித்திட்டமாக மாறுவதையும் உறுதிப்படுத்தும்.

சர்வதேச நாணயநிதியம், இலங்கை அரசு மற்றும் இலங்கை மத்திய வங்கி சேர்ந்து நடத்திய 'இலங்கையின் மீட்சிக்கான பாதை கடன் மற்றும் ஆளுகை' மாநாட்டின் முதலாம் அமர்வின் தொடக்கத்தில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர நாடு முகங்கொடுத்த நெருக்கடி, அதனைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியித்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொருளாதாரத்தின் மீட்சி பற்றிய ஓர் வெளிப்பாட்டினை வழங்கினார். அதற்குப் பின்னர் அவரை நடுவராகக்கொண்டு சர்வதேச நாணயநிதியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா சிறீனிவாசன், திறைசேரிச் செயலாளர் (முன்னைய) மகிந்த சிறிவர்தன, வறுமை ஒழிப்புக்கான நிலையத்தின் தலைவர் தலைவர் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன மற்றும் இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மனதுங்க ஆகியோர் குழுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். அவற்றில் கலந்துரையாடப்பட்ட முக்கியமான விடயங்கள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன.

### சுதந்திரத்துக்குப் பின்னர் வரலாறு காணாத நெருக்கடி

சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில், வரலாறு கண்டிராத அளவு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை 2022ஆம் ஆண்டில் சந்திக்க நேரிட்டது. இந்தச் சிக்கலான காலப்பகுதியில் முக்கியமான பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள் பாரிய சரிவைச் சந்தித்தன. பணவீக்கம் 70 சதவீத உச்சத்தை எட்டியது, இலங்கை ரூபா சடுதியான ஓர் பெறுமானத் தேய்வைப் பதிவுசெய்தது, வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்ததுடன் பொருளாதாரம் 7.3 சதவீத சுருக்கத்தை பதிவுசெய்தது.
இந்தப் பொருளாதார நெருக்கடியென்பது 'ஓரிரவுக் காலப்பகுதியில்' ஏற்பட்டதல்ல என்பதனை மிகவும் தெளிவாக கலாநிதி அமரேசகர சுட்டிக்காட்டினார். பல ஆண்டுகாலமாகக் காணப்பட்ட சிக்கல்களான, அதிகரித்துவந்த பொதுக்கடன், தாழ்வான வரிவருமானம் மற்றும் தவறான பொருளாதாரத் தீர்மானங்களே இதன் பின்னணியில் காணப்பட்டன. இவற்றுடன், 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் வெளிவாரியான அதிர்வுகளும் இந்தச் சிக்கல்கள் மீது மேலும் அழுத்தத்தைச் செலுத்தி, பொருளாதாரத்தின் நெருக்கடிக்கு வழிவகுத்தன.




## நாணயநிதியத்திட்டத்தின் இலக்குகள் எவை?

நாணயநிதியத்துடனான இலங்கையின் நிகழ்ச்சித்திட்டம் ஐந்து முக்கிய குறிக்கோள்களைக் கொண்டுள்ளது:

1. வரியிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை அதிகரித்தல், வீண் அரச செலவினங்களைக் குறைத்தல் மற்றும் இவைக்கு மத்தியில் பாதிக்கப்படக்கூடிய வகுப்பைப் பாதுகாத்தல்.
2. பொதுப்படுகடனை நிலைபேறானதாக மாற்றல், மொத்தப் பொதுக்கடனைக் குறைத்தல் மற்றும் மீள்கொடுப்பனவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
3. விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதல்
4. நிதியியல் முறைமையைப் பாதுகாத்தல்
5. ஊழலை எதிர்ப்பது மற்றும் வளர்ச்சியைத் தூண்தல்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் கொலை மகள் கைது

கொழும்பு, ஓக.6 குருணாகலில் வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனியப் பகுதியில் தனது தாயை கழுத்து நெரித்துக் கொடூரமாக கொலை செய்த மகள் கைதுசெய்யப்பட்டுள்ளார் என வாரிய பொலப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. சந்தேக நபரான மகள் மனநல நோயால் பாதிக்கப்பட்டவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1946 மறைவு 05 . 08 . 2025



### திருமதி. பாலசிங்கம் புஸ்பராணி

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் நவக்கிரி மேற்கு புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பாலசிங்கம் புஸ்பராணி (சிவகிளி) அவர்கள் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் மகளும், மாரிமுத்து - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யோகம்மா, சிவயோகம் (கனடா), காலஞ்சென்றவர்களான தர்மகுணசிங்கம், தர்மராஜா, மற்றும் வர்ணகுலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சின்னத்துரை, பாலர், முத்தாச்சி, பரிமளம் மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.08.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் சரவணை பூர்வீக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவனை புன்னாங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. மோகனராஜா (சூட்டி)
பெறா மகன்
076 260 1718

## மரண அறிவித்தல்

### கணேசலிங்கம் இந்திராணி



தோற்றம் 07.04.1950 மறைவு 04.08.2025

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கேணியடி வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் இந்திராணி அவர்கள் கடந்த (04.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கணேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுமார். துரைரத்தினம் மற்றும் இராசமலர். பாஸ்கரன். நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்துமதி (பிரான்ஸ்). ஜனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதரன் (பிரான்ஸ்). சயிலன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும். விபிஷன். டிக்ஷன். ஆட்விகா. ஆரோக் ஆகியோரின் பேர்த்தியும். கலைமதியின் பெரியதாயாரும் கமலபாஸ்கரன். ராசன் காலஞ்சென்றவர்களான ஞானானந்தன். இரவீந்திரன் மற்றும் கனகம்மா. லீலாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணவர்-கணேசலிங்கம் (லிங்கம்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 08 . 1946 மறைவு 05 . 08 . 2025



### செல்லத்துரை வரதராஜன்

(ஓய்வு நிலை சித்திர பாட ஆசிரிய ஆலோசகர் யாழ்.கல்வி வலயம்)

நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வரதராஜன் அவர்கள் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சகுந்தலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், வனிதாமணி மற்றும் காலஞ்சென்றவர்களான சிரோன்மணி, ஜெயமணி, ருக்குமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும். பானுமதி (லண்டன்), பாலமுருகன் (விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்). பாலமுரளி (ஆசிரியர்-யாழ் புனித சாள்ஸ் ம.வி). சாருமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். உதயகுமார் (லண்டன்). சுரேஸ்குமார் (லண்டன்). ஜெயப்பிரதா (ஆசிரியை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்). ரேகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமானாரும். அபிராம். ஆரபி. அக்ஷயன். மதுரன். ராகுல். அக்ஷரா. அபினேஸ். டஜசங்கர். ரம்மிஜன் ஆகியோரின் பேரனும். பிரசன்னா. மதுசூதனன். சந்திரகாந்தி. மேனகா. சகுந்தலை. பூங்கோதை. ரகுராமன். சுகுமாரன். ஜெயக்குமாரன். சுகுணா. மஞ்சுளா. மோகனா. வசுந்தரா. சாரதா. பாலகுமாரன். வசந்தினி. குணசேகரன். மணிசேகரன். சுரேஸ்கரன். உமாமகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 02.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 725 1962, 077 923 2333

தகவல்:
குடும்பத்தினர்

## கல்வி சீர்திருத்தத்திற்காக பள்ளி மேம்பாட்டுக் குழுக்களை (SDCs) மறுசீரமைக்க வேண்டியது கட்டாயமான தேவை




கல்விச் சீர்திருத்தம் குறித்து NPP நடத்திவரும் பொது ஆலோசனையை நாங்கள் ஏற்றுக்கொண்டு வரவேற்கும் அதே வேளையில் பள்ளி மேம்பாட்டுக் குழுக்களின் (SDCs) தற்போதைய கட்டமைப்பு மற்றும் செயல்பாடு பற்றிக் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

SDC-களை மறுசீரமைத்து அவற்றை முற்று முழுதாக இயங்க வைக்காமல், எந்த அர்த்தமுள்ள கல்விச் சீர்திருத்தமும் நிலையானதாகவோ அல்லது சமூகத்திற்கு பயனுள்ளதாகவோ இருக்காது.

குறிப்பாக வடக்குப் பகுதியில் உள்ள பள்ளி மேம்பாட்டுக் குழுக்கள் செவ்வனவே செயல்படாமல், கல்வித் துறையின் நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக, பொறுப்புக்கூறல் அல்லது சமூக பங்கேற்பு இல்லாமல், அவை பெயரளவில் மட்டுமே இயங்குகின்றன.

தெளிவான வழிகாட்டுதல்கள் இருந்தபோதிலும், பள்ளி மேம்பாட்டுக் குழுக்கள் எதிர்பார்த்தபடி செயல்படவில்லை:

- முழுக் கல்லூரித் தேவைகளோ, முழுக் கல்லூரிச் சமூகமோ பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை.
- கலந்து ஆலோசியாமல் தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன.
- பங்குதாரர் ஈடுபாட்டால் பள்ளிகள் பயனடைவதில்லை.

இதை பாராளமன்ற உறுப்பினர்கள், கல்வி அமைச்சு மற்றும் தேசிய மக்கள் கட்சித் தலைமைக்கு முறையாகத் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் உரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*எங்கள் கோரிக்கை கொள்கையளவில் மட்டும் கல்விச் சீர்திருத்தம் செய்யாமல், உண்மையான, ஜனநாயக, சமூகத்தால் இயக்கப்படும் அமைப்புகளாக செயல்பட **SDC**-களை மறுசீரமைப்பு செய்வதாகும்.*

பள்ளி மேம்பாட்டுக் குழுக்கள் மறுசீரமைக்கப்பட்டு முழுமையாகச் செயல்படத் தொடங்கப்படாவிட்டால்:

- விவாதத்தில் உள்ள சீர்திருத்தங்கள் திறம்பட செயல்படுத்த முடியாது.
- கல்வித் துறையின் நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும்.
- பள்ளிகளுக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பின்மை நீடிக்கும்.

கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில், பயனுள்ள பள்ளி மேம்பாட்டுக் குழுக்களின் மறுசீரமைப்பிற்கான உத்திகளைப் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பை வரவேற்கிறோம்.

தொடர்புகளிற்கு:
மயில்வாகனம் சூரியசேகரம்,
வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக் குழு உறுப்பினர்
077 103 5780, soori1942@gmail.com

நடராஜா பவன்
SDC மறுசீரமைப்புகுழு ஒருங்கிணைப்பாளர்
074095 1964, nadarajahbhavan@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

06.08.2025 புதன்கிழமை


## மரண அறிவித்தல்



### தாமோதரம்பிள்ளை மகாதேவன்

(ஓய்வு நிலை ஆசிரியர் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

யாழ் உடுப்பிட்டி தெற்கு, பண்டகையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை மகாதேவன் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தேவரஞ்சனா அவர்களின் அன்புக் கணவரும், மகாலிங்கம் அவர்களின் சகோதரரும், அசோக்குமார் (ஆசிரியர் யா/விக்கினேஸ்வரக் கல்லூரி), யசோதினி (ஆசிரியை யா/இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்ஷ்மிவாசன் (பொறியியலாளர் -RDA), யசோதா (ஆசிரியை- யா/ ஆழியவளை சி.சி.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பானுஜன், ஹர்மிசா, நிக்ஷயன், தேஜோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 02.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 306 8787


# தென்னக்கோனின் பின்புலம் விசாரிக்கப்படுதல் அவசியம்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 6

தேசபந்து தென்னகோன் இழைத்ததாகக் கூறப்படும் குற்றச் செயல்களுக்கு ஆலோசனை வழங்கிய, அவரை வழிநடத்திய அரசியல் தலைவர்கள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் நேற்றைய அமர்வில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் எல்லா விடயங்களுக்கும் நீதிமன்றத்தை நாடிய தேசிய மக்கள் சக்தி, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஏன் நீதிமன்றத்தை நாடவில்லை. அவருடன் ஏதேனும் 'டீல்' இருந்ததா? தேசபந்து தென்னகோனுக்கு இவ்வாறான விடயங்களை செய்வதற்கு ஆலோசனை வழங்கிய அரசியல்வாதிகளும் உள்ளனர். அவர்கள் தொடர்பில் ஏன் கதைக்கப்படவில்லை? அரசியல் தலைவர்களின் தேவைகளை நிறைவேற்ற முற்பட்டதால்தான் தேசபந்து இன்று பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளார். தேசபந்துவுக்கு ஆலோசனை வழங்கிய, வழிநடத்திய அரசியல்வாதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றியும் தேடப்பட வேண்டும். தேசபந்து விடயத்தில் இருந்து தற்போதைய அரச அதிகாரிகள் ஒரு விடயத்தை கற்றுக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளுக்காக, அரசியல் தேவைகளை நிறைவேற்ற முற்பட்டால் இறுதியில் இந்தநிலைதான் ஏற்படும்' - என்றார். (ம-44)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 41 ஆண்டுகள் கற்பித்தல் சாரா-உத்தியோகத்தராகப் பணியாற்றி எதிர்வரும் 8ஆம் திகதி பணி ஓய்வு பெறவுள்ள சந்தியா தேவராசாவுக்கான மணிவிழா கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41-66)

## சேந்தான்குளத்தில் இருந்து

# கடற்றொழிலுக்குச் சென்ற இருவரைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்ப்பாணம் சேந்தான்குளம் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற இருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 40 மற்றும் 50 வயதுடைய இருவர் நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்காகச் சென்ற நிலையில், நேற்று வரை கரை திரும்பவில்லை. இதையடுத்து அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மீனவர்களும், கடற்படையினரும் இணைந்து இந்த தேடுதல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-27)

# "கரை எழில்" நூலுக்கு ஆக்கங்கள் கோரல்


கிளிநொச்சி, ஓக.6

கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவை வெளியிடவுள்ள "கரை எழில்" கலாசார நூலுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கம் சொந்த ஆக்கமாக இருக்கவேண்டும். கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களின் கலை கலாசாரம், வாழ்வியல்முறை என்பவற்றை உள்ளடக்கிய ஆக்கங்களாக இருத்தல்வேண்டும்.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் தொழில் நிமித்தம் கடமைபுரிகின்றவர்களும் ஆக்கங்கள் அனுப்பலாம். ஆக்கங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கரைச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (ச-25)


## மரண அறிவித்தல்

தோற்றம்
26
03
1941



மறைவு
05
08
2025

### இராசரத்தினம் தவமணி

அளவெட்டி காளி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தவமணி நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமு - தங்கச்சியம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சரஸ்வதி, பவளம், மகாதேவன், பூமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அரியகுட்டி, கண்மணி ஆகியோரின் அன்பு மருமகளும், துரையம்மா, அருளம்மா, நடராசா, குணசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், அமுதா, அம்பிகா, சுதர்சன், அனுசுயா, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரன், பாஸ்கரன், ரஜிதா, ஜெயக்குமார், சுபோஜினி ஆகியோரின் மாமியாரும், யுஆன், செலினா, லகிதரன், பகிதரன், கிருதரன், டிலான், டில்சியா, நிமிகா, கிசோன், கீனுசா, அஸ்வின், லக்ஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 261 2694


# புதிய எல்லை நிர்ணயக்குழு அமைச்சரவையால் அனுமதி!

கொழும்பு, ஓக். 6

2012ஆம் ஆண்டு மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணயக் குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து உரிய பரிந்துரைகளை முன்வைப்பதற்காக புதிய எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ, இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நிறுவுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்காக 2012ஆம் ஆண்டு எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. குறித்த குழுவின் ஒருசில விதந்துரைகளை மாத்திரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்னர் 2021ஆம் ஆண்டில் மீண்டும் எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் விதந்துரைகள் தொடர்பாக இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அவற்றை மீளாய்வு செய்து விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக புதிய எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-44)


பணியாளர் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பணியாளர் தேவை

076 583 0277

உடனடி விற்பனைக்கு

அலுவலக பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopier, A/C மற்றும் Scanner, Washing Machine, Fridge உடனடி விற்பனைக்கு உண்டு.

077 666 5628


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைக்காடு...

102 கிலோ 350 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.
கடற்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரண்டு பெரிய பொதிகளில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மீட்கப்பட்ட கஞ்சா அண்ணளவாக 23 மில்லியன் ரூபா பெறுமதியுடையது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ஸ்கான்...

சித்துப்பாத்தி இந்துமயானத்தில் மேலதிகமாக புதைகுழிகள் இருக்கின்றனவா என்று அறிவதற்காக தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் (ஜி.பி.ஆர்.)ஸ்கான் செய்யும் நடவடிக்கைகள் நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம்பெற்றன.
இந்தப் பணிகள் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையிலேயே, அது தொடர்பான அறிக்கைகள் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## செம்மணி...

செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட புத்தகப்பை, சிறுவர்களின் காலணிகள், குழந்தையின் பாலூட்டும் போத்தல் (போச்சி), வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப்பொருள்கள் மக்களின் பார்வைக்காக நேற்று மாலை வைக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய, என்புக்கூடுகளாக மீட்கப்பட்டவர்களை அடையாளம் காணும் விதமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
சுமார் 200 பேர் சான்றுப்பொருள்களைப் பார்வையிட்டபோதிலும், எவரும் எதையும் அடையாளம் காட்டவில்லை. (அ-ம-26)

## சர்வதேசத்...

அறிவித்துள்ளது. செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேசத்தின் தலையீட்டை பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். செம்மணிப் புதைகுழி அகழ்வைக் கண்காணிக்க சர்வதேசத்தின் தலையீட்டைக்கோரி வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்த் தரப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குக் கடிதமும் அனுப்பியுள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, செம்மணியில் சர்வதேசத் தலையீடு தேவையில்லை என்று பிரதியமைச்சர் முனீர் முலாபர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணிப் புதைகுழியில் இடம்பெறும் அகழ்வுப் பணிகளுக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அரசாங்கம் தனது பங்களிப்பை உணர்ந்து பொறுப்பை மிகச்சரியாக நிறைவேற்றிவருவதுடன், நீதிமன்றத்தின் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில், சர்வதேசம்தான் தலையிட வேண்டும் என்று கோருவது நியாயமற்றது.
சிலவேளைகளில் தொழில்நுட்ப அல்லது நிபுணத்துவ உதவிகளை சர்வதேசத்தில் இருந்து பெறவேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறான நிலை ஏற்பட்டால், அரசாங்கம் தனது பொறுப்பை சரிவர நிறைவேற்றும் - என்றார். (அ-ம-இ)

## மேலும் 6...

அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வின் 31ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே மேலும் ஆறு என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 141ஆக அதிகரித்துள்ளது.
நேற்று மேலும் 4 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை மீட்கப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 130ஆக அதிகரித்துள்ளது. (அ-ம-26)

## தென்னக்கோனை...

நேற்றுப் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் நேற்றுக் காலை 11.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதனைத் தொடர்ந்து மாலை 4.10 மணிக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 177 உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். எதிராக எந்தவொரு வாக்கும் பதிவாகவில்லை. சில கட்சிகள் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.
பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரும் தீர்மானம் 115 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கடந்த மார்ச் மாதம் கையளிக்கப்பட்டது. குறித்த விசாரணைக் குழுவை அமைப்பதற்கான தீர்மானம் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
இதனைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனால், மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்கான குழு நியமிக்கப்பட்டது.
இந்தக் குழு அப்போதைய உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி. இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ. டபிள்யூ.எம்லலித் ஏக்கநாயக்க ஆகியோரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது.
இந்தக் குழு நாடாளுமன்றத்தில் கூடி, சட்டத்துக்கு அமைய விசாரணைகளை நடத்தியிருந்தது. விசாரணைகளின் முடிவில் குழுவின் அறிக்கை கடந்த ஜூலை 21ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையை சபாநாயகர் கடந்த ஜூலை 22 நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இதன்போது அவர் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டே பதவி நீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-44)

## நாடாளுமன்ற...

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் நாளை அமைச்சர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்றத்தில் இன்றைய அமர்வின்போது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம், 'காற்றாலை மின்திட்டத்துக்கு எதிராக மன்னாரில் மக்கள் போராட்டம் இடம்பெற்றுவருகின்றது. எனவே. இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டும். ஜனாதிபதியைச் சந்தித்து வாய்ப்பொன்றை ஏற்படுத்தித் தாருங்கள்' என்று கோரியிருந்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரும் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.
இதன் விளைவாக, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்வரும் (நாளை) வியாழக்கிழமை கலந்துரையாடலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. குறித்த கலந்துரையாடல் இடம்பெறும் வரை எவ்வித நகர்வும் முன்னெடுக்கப்படாது என உரிய அமைச்சர் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன - என்றார். (அ-ம-60-56)

## காற்றாலை....

டைக் கண்டித்து நேற்றுக் கடையடைப்புப் போராட்டம் இடம்பெற்றது.
காற்றாலைக்குத் தேவையான உபகரணங்களுடன் வந்த வாகனங்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் இடைமறித்து போராட்டம் மேற்கொள்ள ஆரம்பித்திருந்தனர். இந்தப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. இதன் ஒரு பகுதியாகவே, கடையடைப்புப் போராட்டம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-60-56)

## புதைகுழி...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. மாறாக, எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
நீதி அமைச்சின் செயலாளர் மூலம் அரசாங்கம் செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் தலையிடுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.
அமைச்சர் பிமல் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணைகள் நீதிமன்ற கண்காணிப்புடன் இடம்பெற்றுவருகின்றன. தேவையான வசதிகளை அரசாங்கம் செய்துகொடுத்துள்ளது.
வடக்கில் குற்றச்செயல்களுடன் ஈடுபட்ட சில குழுக்களுடன் இணைந்து இவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர். செம்மணிப் புதைகுழியில் உள்ள சில எலும்புக்கூடுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்புடன் இணைந்துதான் இவர்கள் ஆட்சியமைத்துள்ளனர்.
வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கே அதிக வாக்குகள் உள்ளன. நிச்சயம் நாம் நீதியை நிலைநாட்டுவோம். தெற்கில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை எப்படியாவது மீள ஏற்படுத்துவதற்கு தெற்கில் ராஜபக்சக்கள் முற்படுகின்றனர். வடக்கில் இவர்கள் முற்படுகின்றார்கள். அதனால்தான் ஏதேனும் ஒரு சம்பவத்தை தூக்கிப்பிடிக்கின்றனர்.
செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைக்கு நாம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம்கூட ஒத்துழைப்பு கோரியுள்ளோம். சமத்துவ அரசாங்கம் வந்துள்ளதால் இவர்கள் வடக்கில் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-44)


## அகழ்வுப்...

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில், நீதி அமைச்சு அரசியல் ரீதியாக தலையீடு செய்கின்றது. நீதி அமைச்சின் செயலாளர் அகழ்வில் ஈடுபடுவோருடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணி மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருள்களை பொதுமக்களுக்கு முன்பாக வைத்து அவர்கள் அதனை அடையாளப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை நீதிமன்றம் இன்று (நேற்று) வழங்கியுள்ளது.
இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் நிலையில், நீதி அமைச்சின் செயலாளர், அங்கே அகழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார். இதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். இது அரசியல் மயப்படுத்தும் வேலைத்திட்டம் அல்லவா? இது அரசியல் தலையீடு இல்லையா? இது ஓர் அழுத்தத்தை கொடுக்கும் விடயம் அல்லவா?
நீதிமன்றம் நடத்துகின்ற ஒரு செயற்பாட்டில் உங்களுக்கு தகவல் வேண்டும் என்றால் நீங்கள் நீதிமன்றத்திற்குத்தான் போகவேண்டும். நீதி அமைச்சு அங்கு பணிபுரிவோருடன் நேரடியாக தொடர்புகொள்வது அரசியல் தலையீடு. அதை நீங்கள் செய்யலாமா? நீதி அமைச்சின் செயலாளர்தான் இவ்வாறு செயற்படுகின்றார். நான் மிகவும் மதிக்கும் அம்மணி அவர். இப்படி அவர் செயற்படுவார் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால் அது நடக்கின்றது - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு
08 . 05 . 1938



உதிர்வு
05 . 08 . 2025

### ஆறுமுகம் கந்தையா

கோண்டாவில் ஸ்ரேசனடியைப் (புகையிரத நிலைய வீதி) பிறப்பிடமாகவும் கோண்டாவில் காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா அவர்கள் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அரசமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், லட்சுமி, செல்லர், மயில்வாகனம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் கஜேந்திரன், மோகனதாஸ் (பிரான்ஸ்), உமாதேவி, பிறேமதாஸ் (பிரான்ஸ்), சுகுனதாஸ் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி, சந்திரகலா (பிரான்ஸ்), வித்தியா (ஜேர்மனி), சிவஜோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்ஷன், டிலோஷன், கென்சிஜா, கஜனன், கபிலன், காவியன், மிதுலன், புகழவன், தனுமகிழினி, வைஷ்ணவன், சதுர்ப்பியன், அபிநாஸ், ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 8318 542, 075 077 5057

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 45726) A


# இலங்கை முழுவதும் இந்தியாவின் கையில்

## விமல் வீரவன்ஸ கொதிப்பு



கொழும்பு, ஓக.6

இந்தியா இலங்கையை முழுவதுமாக ஆக்கிரமித்துவிட்டது என்றும் இலங்கையின் பல முக்கியமான துறைகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்றும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தாவது-

இந்தியா எமது நாட்டை முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. டிஜிற்றல் அடையாள அட்டைகளைத் தயாரிக்கும் பணி அந்த நாட்டுக்கு வழங்கப்படுவ தன்மூலம் எமது நாட்டுப்பிரஜைகள் அனைவரினதும் தகவல்கள் இந்தியாவிடம்சென்றுவிடும். அதுமட்டுமல்ல, இந்த நாட்டுக்குயாரெல்லாம்சுற்றுலாவிகளாக வருகிறார்கள் என்று அறிவதற்கு இந்தியா முயற்சி செய்கிறது. இதை வெளிநாட்டுச் சுற்றுலாவாசிகள் விரும்பமாட்டார்கள். இந்தியாவின் தொழில்நுட்பத்தை நம்பமுடியாது. இந்தியாவின் தொழில்நுட்பம் என்ற பெயரில் இஸ்ரேலின் தொழில்நுட்பத்தை ஈரானுக்கு வழங்கியது இந்தியா. அதனால்தான் ஈரான் இலகுவாக இஸ்ரேலைத் தாக்கியது. இவ்வாறு துரோகம் செய்கிற நாடுதான் இந்தியா. அது நம்பிக்கைக்குரிய நாடு அல்ல. எமது நாட்டை அது வேறு சக்திகளுக்குக் காட்டிக்கொடுத்துவிடும். துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியாவின் டொக்யார்ட் நிறுவனத்துக்கு வழங்கவுள்ளது இலங்கை அரசு. அந்த இடத்தில் இந்தியப் போர்க்கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் தயாரிக்கப்படும். இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது இந்த அரசாங்கம். ஆனால், அவற்றை வெளியிட முடியாது என்று சொல்கிறது. ஜே. ஆர். கூட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை வெளியிட்டார். ரணில்கூட புலிகளுடன் செய்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை வெளியிட்டார். அரசாங்கம் இந்தியாவுடன் செய்த ஒப்பந்தத்தை வெளியிடமறுக்கிறது என்றால் அது பாரதூரமான எமது நாட்டுக்கு எதிரானதாகவே இருக்க வேண்டும். இதற்கு எதிராக எதிர்க்கட்சிகளும் பேசுவதில்லை. ஊடகங்களும் பேசுவதில்லை. ஊடகங்கள் அனைத்தையும் வாங்கிவிட்டது இந்தியா-என்றார். (எ-75)


### காணி விற்பனைக்கு

4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 076 808 5192

### வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கி வரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
070 745 8567

### தேவை

கொழும்பில் உள்ள மிளகாய்த்தூள் மில்லுக்கு பிளேட் மாற்ற தெரிந்த, ஈர அரிசிமா அரைக்க வறுக்கும் பதம் (மெசின்) பார்க்க தெரிந்த ஆட்கள் தேவை. தங்குமிடம் தரப்படும்.
சம்பளம் 1 நாளுக்கு 4000/= வரை சம்பாதிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 075 8005057

(CR 45690) A

### வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் ஆரியகுள சந்திக்கும் இராசாவின் தோட்ட சந்திக்குமிடையில் நிறுவனங்கள் அல்லது வணிக நோக்கங்களுக்கு பொருத்தமான ஒரே காணியில் அமைந்த இரண்டு வீடுகள் வாடகைக்கு.

தொடர்புகளுக்கு:
077 900 4515, 071 982 9666

### தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

(CS/58593) J-1

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

### குடியிருப்பு காணி விற்பனைக்கு

அமைவிடம் : தாண்டிக்குளம், வவுனியா, பிரமண்டு கனிஸ்ட பாடசாலையின் கிழக்கு புறமாகவுள்ள நெடுச்சேரிக்குளம் பிரிவில் பாடசாலைக்கும், A9 வீதியில் இருந்தும் 100 மீற்றர் தூரத்தில், சிறந்த அமைவிடத்தில் 4 பரப்புக் குடியிருப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசி தீர்மானிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: WhatsApp:076 078 3603
Vavuniya:0777 343 288

(CR 30404) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 01 . 1934



மறைவு
03 . 08 . 2025

### வைரமுத்து நாகம்மா

கைதடி தெற்கு, கைதடியை பிறப்பிடமாகவும், கைதடி மேற்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நாகம்மா அவர்கள் கடந்த 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 4.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பெரியநாச்சி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலாயுதர் அவர்களின் பாசமிகு சகோதரியும், காசிப்பிள்ளை, சுந்தரலிங்கம், வரதலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சிவலிங்கம், சாந்தினி, சிவாஜினி(சுறோ ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருந்ததி, குகபதி, சுதேஸ்வரி, அரியமலர், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சினி மற்றும் பாலசுந்தரம், பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சக்தீபன்-அபிரா, சதீபன்-ஜஸ்வர்யா, நிருத்தன்- ஜெக்குலின், நிமலன், நிரோஜினி - பாருஷன், அபிராமி -நிசாந்தன், ஆரணி , கீதாஞ்ஜலி - றஜீத், விபுலன், சிவகௌதன், துஷ்யந்தி - இராஜகுமார், தருணி- நிதர்சன், சங்கவி, மதுமிதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், வீரத்,ஜானு,றியோ, லியோ, றபேல், யூனோ, அகிலன், ஜஸ்மிதா, மாதினி , இஷான், ஜெயாஷ், ஆகியோரின் பாசமிகு பூட்டியும் , லிங்காதரன் அவர்களின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.08.2025 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.
077 844 5045

தகவல்:
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.